வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 12.06.2025 வியாழக்கிழமை இதழ் : 163 பக்கங்கள் : 12




# மின்சார கட்டணம் 15 வீதம் அதிகரிப்பு

## இன்று முதல் நடைமுறை

கொழும்பு, ஜூன் 12

**இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மின்சார கட்டணம் 15 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

மின்சார கட்டணத்தை 18.3 சதவீதம் அதிகரிப்பதற்கு பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு முன்மொழிவை மின்சார சபை வழங்கியது. இதனை மறு ஆய்வு செய்ததுடன், மக்களின் கருத்துகளையும் கேட்டறிந்த பொது பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்சார கட்டண அதிகரிப்பை 15 வீதமாக கட்டுப்படுத்தி அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டில் மின்சார கட்டணத்தில் மேற்கொள்ளப்படும் இரண்டாவது திருத்தம் இதுவாகும். முன்னர், கடந்த ஜனவரி 18ஆம் திகதி மின்சார கட்டணம் திருத்தப்பட்டது. அப்போது, 20 சதவீதத்தால் மின் கட்டணம்

11

# மக்கள் ஆணைக்கு செய்யும் துரோகம்!

## எதிர்க்கட்சி தலைவர் சாடல்



கொழும்பு, ஜூன் 12

மின்சார கட்டணத்தை 15 வீதம் அதிகரிப்பது மக்கள் ஆணையை காட்டிக் கொடுக்கும் செயல் - மக்கள் ஆணைக்கு இழைக்கும் துரோகம் - இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விமர்சித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் வெளியிட்ட விசேட ஊடக அறிவிப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், இலங்கை மின்சார சபையும் அரசாங்கமும் முன்வைத்த முன்மொழிவின் அடிப்படையில் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார கட்டண அதிகரிப்பு முடிவை எடுத்துள்ளது. இது, மக்கள் ஆணையை மீறும் செயலாகும். மக்களின் குரலுக்கு செவிசாய்க்காத போக்காகும். இது இந்நாட்டு மக்களை ஏமாற்றும் நடவடிக்கையாகும்.

ஜனாதிபதி தேர்தலின் போது, மின்சார கட்டணத்தை 33 வீதத்தால் குறைப்போம் என்றும்

11



# ரணில் நேற்று சி. ஐ. டி.இல் வாக்குமூலம்!

கொழும்பு, ஜூன் 12

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று புதன்கிழமை குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் அளித்தார். சுமார் ஒரு மணி நேரம் அவர் வாக்குமூலம் அளித்திருந்தார்.

மருந்து வகைகள் இறக்குமதி செய்யப்பட்டமை

11



நல்லூர் பிரதேச சபை:

# தமிழ் அரசு, த.ம.கூட்டணி ஒப்பந்தத்தில் கைச்சாத்து

கொழும்பு, ஜூன் 12

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் இலங்கை தமிழ் அரசு கட்சியும் தமிழ் மக்கள் கூட்டணியும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க. வி. விக்னேஸ்வரனின் கொழும்பு இல்லத்தில் நேற்று புதன்கிழமை இந்த ஒப்பந்தம்

11

கரையொதுங்கும் மாசு பொருள்கள்:

# தீவக மக்களுக்கு எச்சரிக்கை!



யாழ்ப்பாணம், ஜூன் 12

"தீவக பகுதிகளில் பிளாஸ்ரிக், பொலித்தீன் தயாரிப்பு மூலப்பொருட்கள் பெருமளவில் கரையொதுங்கி வருகின்றன. இவை மனிதனுக்கும் சூழலுக்கும் தீங்கு விளைவிக்கவல்லவை. எனவே, இவற்றை தொடுதல், எடுத்துச் செல்வதை தவிர்க்கவேண்டும்", என்று யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர்

11

# மனித புதைகுழி அகழ்வை கிடப்பில் போடக்கூடாது!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 12

"வடக்கில் தொடர்ந்து தோண்டப்படும் மனித புதைகுழிகள் தொடர்பில் அநுர அரசாங்கம் உரிய கவனம் செலுத்தவேண்டும். ராஜபக்ஷ அரசாங்கம்போல இந்த விவகாரத்தை அநுர அரசாங்கம் கிடப்பில் போடக்கூடாது." - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

அரியாலை சித்துப்பாத்தி மனித புதைகுழி தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மனித புதைகுழி அகழ்வுக்கு நிதி

11



# காற்றாலை மின் திட்டத்துக்கு எதிராக மன்னாரில் பேரணி!

மன்னார், ஜூன் 12

மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நேற்று புதன்கிழமை கவனவீர்ப்பு பேரணி நடத்தப்பட்டது.

மன்னார் பிரஜைகள் குழு, சிவில், பொது அமைப்புகள் இணைந்து இந்தப் பேரணியை முன்னெடுத்தன.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான பேரணியில் மாவட்ட சிவில், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சர்வமத தலைவர்கள், வர்த்தகர்கள், அரசியல் பிரதிநிதிகள் பெருந்தொகையினரான மக்கள் பங்கேற்றனர்.

மைதானத்திலிருந்து நகர்ந்த பேரணியினர்

11



# மட்டு. மாநகர முதல்வராக சிவம் ஒருமனதாக தெரிவு!

மட்டக்களப்பு, ஜூன் 12

மட்டக்களப்பு மாநகர சபையின் 8ஆவது முதல்வராக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சிவம் பாக்கியநாதன் ஒருமனதாக தெரிவாகியுள்ளார். பிரதி முதல்வராக வைரமுத்து தினேஷ்குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர், பிரதி முதல்வரை தெரிவு செய்வதற்கான அமர்வு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ. எல். எம். அஸ்மி தலைமையில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போது, இலங்கை தமிழ் அரசு கட்சியின்

11

# அபிவிருத்திப் பணிகளை வேறுபாடின்றி முன்னெடுப்பேன்!

## மட்டு. அபிவிருத்தி குழு தலைவர்

மட்டக்களப்பு, ஜூன் 12

"ஜனாதிபதியின் விருப்பத்தைப்போல மட்டக்களப்பு மாவட்டத்திலும் வேறுபாடுகளின்றி அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பேன்", என்று மட்டக்களப்பு மாவட்ட புதிய அபிவிருத்தி குழு தலைவராக பொறுப்பேற்றுள்ள அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்கு குழுக் கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "போர் காலத்தில் கிழக்கு மாகாணம் மிகவும் பாதிக்கப்பட்டது. இதனை கட்டியெழுப்பவேண்டிய கடமை நமக்கு உள்ளது.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அம்புலன்ஸ் வண்டிகள் பற்றாக்குறை!

## சிகிச்சைக்கு செல்ல 3 மணி நேரம் காத்திருந்த மாணவி

முல்லைத்தீவு, ஜூன் 12

**புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் அம்புலன்ஸ் பற்றாக்குறையால் மாணவி ஒருவர் சுமார் 3 மணி நேரம் உரிய சிகிச்சை கிடைக்காது சிரமப்பட்டுள்ளார். இதே சமயம், அம்புலன்ஸ் பற்றாக் குறையால் நோயாளர்கள் பலரும் பாதிப்புகளையும் சிரமங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.**

இதேநேரம், மருத்துவமனை தரப்பு நோயாளர்களுடன் தவறான வார்த்தை பிரயோகங்களில் ஈடுபடுகின்றது என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் பாடசாலை மாணவி ஒருவர் தலையிடி, வாந்தி, மயக்கம் காரணமாக புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரை மேலதிக சிகிச்சைக்காக மாணவியை முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் சேர்க்குமாறு மருத்துவர்கள் பரிந்துரைத்தனர்.

சுமார் 3 மணி நேரம் மாணவியும் பெற்றோரும் காத்திருந்தும் முல்லைத்தீவு பொது மருத்துவமனைக்கு செல்வதற்கு அம்புலன்ஸ் வரவில்லை. சுமார் 3 மணி நேரத்தின் பின்னர் மாணவியின் பெற்றோர் மருத்துவரிடம் சென்று அம்புலன்ஸ் வண்டிக்காக காத்திருப்பதை கூறியுள்ளார்.

இதற்கு, அந்த மருத்துவர் அம்புலன்ஸ் வாகன பற்றாக்குறை உள்ளது என்று கூறியதுடன், காத்திருப்பதற்கு கஷ்டம் என்றால் சுயவிருப்பில் - சொந்த செலவில் மாணவியை அழைத்துச் செல்லுமாறு கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து, மாணவியின் பெற்றோர் அவரை தமது சொந்த செலவில் முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

புதுக்குடியிருப்பு மருத் துவமனையில் நிலவும் அம்புலன்ஸ் பற்றாக்குறை தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஐ-05)

# பூநகரி பிரதேச சபையின் கன்னி அமர்வு நேற்று!



கிளிநொச்சி, ஜூன் 12

பூநகரி பிரதேச சபையின் கன்னி அமர்வு தவிசாளர் சி. சிறீரஞ்சன் தலைமையில் நேற்று ஆரம்பமானது.

20 உறுப்பினர்களை கொண்ட பூநகரி பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசு கட்சி சார்பில் 10 உறுப்பினர்களும் தேசிய மக்கள் சக்தி சார்பாக 3, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பாக 3, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், சுயேச்சைக் குழு 01, சுயேச்சைக் குழு 02 சார்பில் தலா ஓர் உறுப்பினர்களும் தெரிவானமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதுக்குடியிருப்பு சபையில் தமிழ் அரசு கட்சி ஆட்சி!

புதுக்குடியிருப்பு, ஜூன் 12

புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசு கட்சி ஆட்சியமைத்துள்ளது. அந்தக் கட்சியின் வே. கரிகாலன் தவிசாளராகவும் சுந்தரம் பரந்தாமன் உப தவிசாளராகவும் தெரிவாகினர்.

புதிய தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் ஆகியோரை வரவேற்கும் நிகழ்வு, புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் ச. கிருசாந்தன் தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

புதிய உறுப்பினர்கள் வரவேற்கப்பட்டமையை தொடர்ந்து சபை அமர்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இ. விஜயகுமார், புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் மருத்துவ அதிகாரி எஸ். சத்தியரூபன், ஒட்டுசுட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி ஆ. பகீரதன், உலகளந்த பிள்ளையார் ஆலய குருக்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# இனம், மொழியை நேசிக்கும் இளந்தலைமுறையே இருப்புக்காக போராடும் இனத்தின் நம்பிக்கை!

## சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 12

"இனத்தையும் மொழியையும் நேசிக்கின்ற அடுத்த தலைமுறையின் உருவாக்கம்தான் தனது இருப்புக்காக போராடும் ஓர் இனத்தின் எதிர்கால நம்பிக்கையாக அமைய முடியும்", என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

முரசுமோட்டை முருகானந்த கல்லூரியில் அவரின் ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்ட பிரதான மண்டபத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இனத்தையும் மொழியையும் நேசிக்கின்ற அடுத்த தலைமுறையின் உருவாக்கம்தான் தனது இருப்புக் காகப் போராடும் ஓர் இனத்தின் எதிர்கால நம்பிக்கையாக அமைய முடியும்.

அத்தகையோர் தலைமுறையின் தோற்றத்திற்கு வழிகோலும் சமூகக் கடப் பாட்டை கொண்ட பாடசாலைகள், கல்வி அடைவு மட்டத்திற்கான தளங்களாக மட்டுமல்லாது, பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்கும், தலைமைத்துவ வாண்மைக்குமான களங்களை ஏற்படுத்த வேண்டும். அந்த, காலப்பெரும்பணியை முரசு மோட்டை முருகானந்தாக் கல்லூரி செவ்வனே நிறைவேற்றி வருகிறது - என்றார். (ஐ)

# வடக்கு விவசாய அமைச்சின் திட்டங்கள் குறித்து ஆராய்வு



யாழ்ப்பாணம், ஜூன் 12

வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்த கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

காலநிலை மாற்றம் காரணமாக மழை எப்போது கிடைக்கும் என்பதை எதிர்வுகூற முடியாத நிலைமை இருக்கின்றது. எனவே திட்டங்களை எவ்வளவு விரைவாக செய்து முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக செய்து முடிக்கவேண்டும். இந்த முறை கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியின் 3 மடங்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உரிய வகையில் அதைச் செலவு செய்யவேண்டும். அடையாளப் படுத்தப்பட்டுள்ள திட்டங்களை உரிய காலத்தில் செயற்படுத்தி முடிக்கவேண்டும். அடுத்த மாதத்திலிருந்து நிதி மற்றும் பௌதிக முன்னேற்றங்கள் அதிகளவாக இருக்கவேண்டும் - என்றார்.

விவசாய அமைச்சு, விவசாயத் திணைக்களம், கால்நடை அபிவிருத்தித் திணைக்களம், நீர்பாசனத் திணைக்களம் என ஒவ்வொரு திணைக்களத்தினதும் முன்னேற்றங்கள் தனித்தனியாகவும் விரிவாகவும் ஆராயப்பட்டன. ஒவ்வொரு திட்டங்களினதும் முன்னேற்றம், இடர்பாடுகள் தொடர்பில் ஆளுநரால் தனித்தனியாக கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், பிரதி பிரதம செயலாளர் - நிதி, திட்டமிடல், நிர்வாகம், பொறியியல் விவசாய அமைச்சின் பதில் செயலாளர், விவசாய திணைக்களப் பணிப்பாளர், நீர்பாசன திணைக்களப் பணிப்பாளர், கால்நடை அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் தொடர்புடைய அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ஐ-05)

# சட்டத்தரணி குறித்து அவதூறு பரப்பியவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 12

சட்டத்தரணி ஒருவர் குறித்து அவரின் புகைப்படத்துடன் சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பிய குற்றச்சாட்டில் கைதானவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இணுவிலை சேர்ந்த சட்டத்தரணி போலி உறுதிகளை நிறைவேற்றினார் என்று கூறி, அவருக்கு எதிராக சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பப்பட்டது. இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதையடுத்து, சந்தேகநபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டார்.

இந்த வழக்கு, நேற்று புதன்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, அவரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

# கெஹலியவின் பணிப்பெண் கைதானார்!

கொழும்பு, ஜூன் 12

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்குச் சொந்தமான வீடொன்றில் பணியாற்றும் பெண் ஒருவர் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

இரத்தினபுரி - எம்பிலிப்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த பெண்ணொருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தையிட்டியில் கஞ்சாவுடன் கைதானவருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

தையிட்டி விகாரைக்குள் கஞ்சா போதைப்பொருளை கொண்டு சென்றமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட இளைஞரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தையிட்டி திஸ்ஸ விகாரையில் பொசன் வழிபாட்டுக்காக தென்னிலங்கையிலிருந்து சிலர் அழைத்து வரப்பட்டனர். இவ்வாறு வருகை தந்த இளைஞர் ஒருவர் கஞ்சா போதைப்பொருளுடன் கடந்த திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்டார்.

அவரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். இதன்போது, சந்தேகநபரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
12.06.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 29
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இவர்களா தீர்வை பெற்று தரப் போகிறவர்கள்?

உள்ளூராட்சி சபைகளை அமைக்கும் விடயத்தில் ஏற்பட்ட இழுபறிகள் தொடர்கின்றன. ஏனைய கட்சியினருடன் இணைந்து ஆட்சியமைக்க வேண்டிய சபைகள் தொடர்பில் இன்னும் இழுபறிகள் முடிவுக்கு வரவில்லை. தமிழ் அரசு கட்சி அதிக ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் வடக்கு, கிழக்கிலுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியை கைப்பற்ற வேண்டுமாயின், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி - இவை இல்லாவிட்டால் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவு கட்டாயம் தேவை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இலங்கை தமிழ் அரசு கட்சி யாழ். மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்காக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஆதரவை கோரியது. ஈழ மக்கள் ஜனநாயக கட்சி ஆதரவளிக்கவில்லையாயின், தேசிய மக்கள் சக்தியின் ஆதரவைத்தான் தமிழ் அரசு கட்சி கோர வேண்டி வரும்.

மறுபுறம், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் தமிழ்த் தேசிய பேரவையும் இணக்கம் காணப்பட்டதற்கு அமைவாக சில சபைகளில் ஆடசி அமைக்க முடியும். ஆனால், யாழ்ப்பாணத்துக்கு வெளியில் சைக்கிள் சின்னத்துக்கு ஆதரவு இல்லாத நிலையில் தமிழ் அரசு கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் ஒன்றுபட்டால்தான் ஆட்சியமைக்க முடியும். ஆனாலும் அதிலும் உறுதியான முடிவுகளை எட்ட முடியாதளவுக்கு இழுபறிகள் தொடர்கின்றன.

இலங்கை தமிழ் அரசு கட்சியை பொறுத்தவரையில் முதலில் யாழ்ப்பாணம் என்னும் கொள்கையை கொண்டிருக்கிறது. யாழ். மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கான ஆதரவைப் பொறுத்துத்தான் ஏனைய இடங்களில் எவ்வாறு இணையலாம் என்பதைப் பற்றி சிந்திக்கலாம் என்பதே அவர்களுடைய பதிலாக இருக்கிறது. எழுபத்தைந்து வருட கால அனுபவங்களுக்கு பின்னரும்கூட முதலில் யாழ்ப்பாணம் என்னும் அடிப்படையில் சிந்திப்பது சரியானதா என்பது பற்றி தமிழ் அரசு கட்சியின் தலைவர்கள் சிந்திக்க முயற்சிக்கவில்லை.

இவ்வாறான நிலைமை தொடர்கின்றபோது மறுபுறம், தமிழ் அரசு கட்சிக்குள் யார் மாநகர சபை தலைவராவது என்னும் அடிப்படையில் உள் மோதல்களும் இடம்பெறுகின்றன. திருகோணமலையில் இது உச்சமடைந்திருக்கிறது. இதேவேளை, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினரும் சில மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவுடன் ஆட்சி அமைத்தால் என்ன என்னும் கேள்வியையும் ஆராய முயற்சிக்கின்றனர்.

வெளிப்படையான உடன்பாடு என்று போவதைத் தவிர்த்துத் தந்திரோபாயமாக உறுப்பினர்களின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கலாம் என்று யோசிக்கின்றனர். ஒவ்வொருவரும் கதிரைகளை இலக்கு வைத்து செயல்படுகின்றனர். முதல் நகர்வில் கதிரையை பிடித்துவிட்டால் இரண்டு வருடங்களுக்கு பிரச்னையிருக்காது என்பதால், தமிழ்த் தேசிய கட்சிகளாகத் தங்களை காண்பித்துக் கொள்பவர்களின் ஒரேயோர் இலக்கு கதிரைகளுக்கான அடிபிடியாக மாறியிருக்கிறது.

தேர்தல் காலத்தில் இவர்கள் பேசிய விடயங்கள் என்ன? தேசிய மக்கள் சக்தியை ஒரு பிரதான எதிரியாகக் காண்பித்தனர். ஈழ மக்கள் ஜனநாயக கட்சியை அரச ஒத்தோடிகள் என்றும் அவர்களை நிராகரிக்குமாறும் கோரினர். ஆனால், கதிரைகளைக் கைப்பற்றுவதற்காக அனைவருடனும் உரையாடுகின்றனர். அரசியல் தீண்டாமையை நாம் ஒருபோதும் ஆதரித்ததில்லை. மேலும், அரசியலில் ஐக்கிய முன்னணியாக செயல்பட வேண்டியதன் அவசியத்தைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கிறோம். ஆனால், தேர்தல் காலங்களில் மக்களைத் தவறாக வழிநடத்திவிட்டு, பதவிகள் என்று வருகின்றபோது எவ்வித குற்றவுணர்வும் இன்றி அனைவருடனும் ஒட்டிக்கொள்ள முற்படும் அரசியல் சந்தர்ப்பவாதத்தையே தவறு என்கிறோம். மேலும், உங்கள் அதிகார ஆசைக்காக தமிழ் மக்களை தவறாக வழிநடத்துவதை மோசமான தவறு என்கிறோம்.

இந்த இடத்தில் தமிழ் மக்கள் தங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி ஒன்றுதான். அதாவது, தங்களுடைய சுயநலன்களை புறந்தள்ளி உள்ளூராட்சி மன்றங்களில் சபைகளை அமைக்க முடியாமல் தடுமாறுகின்ற - இழுபறிப்படுகின்ற இவர்களா அரசாங்கத்துடன் மோதி சமஷ்டி அரசியல் தீர்வைப் பெற்றுத் தரப் போகிறார்கள்? இவர்களால் இருக்கிற மாகாண சபையை காப்பாற்ற முடியுமா என்பதே பெரிய கேள்வி. இப்போது நமது பிரச்னையோ வேறு. அதாவது, தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள் அல்லர் மாறாக ஏமாறிக் கொண்டேயிருக்கும் மக்களாகிய நீங்கள்தான் பிரச்னைக்கு உரியவர்கள்.

# பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கை வடக்கில் இன்று முதல் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

பார்த்தீனியம் ஒழிப்பு நடடிக்கையை ஓரிரு நாள்கள் மாத்திரம் முன்னெடுக்க முடியாது. தொடர்ச்சியாக சகல திணைக்களங்களும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும். மக்களுக்கு போதியளவு விழிப்புணர்வு ஏற்படுத்திய பின்னர் சட்ட நடவடிக்கையை தீவிரமாக முன்னெடுக்குமாறு பணித்த வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இந்தத் திட்டத்தை நாளை (இன்று) முதல் ஆரம்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

பார்த்தீனியத்தை ஒழிப்பது குறித்து நேற்றைய தினம் நடந்த சந்திப்பிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தார்.



மேலும், பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கையை கடந்த காலங்களைப் போன்று குறிப்பிட்ட காலப் பகுதிக்கு மாத்திரம் முன்னெடுக்காமல் தொடர்ந்து 4-5 வருடங்களுக்கு முன்னெடுக்க வேண்டும் என அறிவுறுத்திய ஆளுநர், பொதுமக்களுக்கு தெரியப்படுத்தி அவர்களின் காணிகளில் உள்ள பார்த்தீனியத்தை ஒழிப்பது, அரச திணைக்களங்கள் தமக்குரிய ஆதனங்களில் பார்த்தீனியத்தை ஒழிப்பது என அனைத்தும் சமநேரத்தில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். (ஐ)

## வான் விபத்தில் ஒருவர் மரணம்

கொழும்பு, ஜூன் 12

வீதியை விட்டு விலகிய வான் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். 6 பேர் காயமடைந்துள்ளனர்.

அநுராதபுரம் - இபலோகம - ஹிரிபிட்டியாகம சந்திக்கு அருகில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், காயமடைந்தவர்கள் கெக்கிராவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் கெக்கிராவையை சேர்ந்த 48 வயது நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

காயமடைந்தவர்களில் 4 பெண்களும் 2 ஆண்களும் அடங்குவர். காயமடைந்தவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களாவர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இரு வேறு விபத்துகளில் இருவர் உயிரிழந்தனர்!

கொழும்பு, ஜூன் 12

நாட்டில் வெவ்வேறு இடங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துகளில் இருவர் உயிரிழந்தனர்.

குருநாகல் - கல்கமுவ - மொரகொல்லாகம பொலிஸ் பிரிவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்களில் வாய்க்காலில் விழுந்ததில் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இதேவேளை, கொழும்பு - கண்டி வீதியில் தொலங்கமுவ பிரதேசத்தில் முன்னால் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டியை முந்திச் செல்ல முயன்ற மற்றொரு முச்சக்கர வண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்ததில், அதனை செலுத்திச் சென்ற சாரதி உயிரிழந்தார். இந்த விபத்தில் 39 வயது நபரே உயிரிழந்தார்.

## குற்றவியல் சட்டத்தில் திருத்தத்துக்கு அனுமதி!


கொழும்பு, ஜூன் 12

1979ஆம் ஆண்டின் 15 இலக்க குற்றவியல் நடைமுறை கோவை சட்டத்தில் (உடலியல் தண்டனை) திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடவியலாளர் மாநாடு நேற்று புதன்கிழமை நடைபெற்றபோதே அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்தத் தகவலை தெரிவித்தார்.

மேலும், எந்தவொரு துறையிலும் உடல் தண்டனை மூலம் துன்புறுத்தல் செய்வதை தடை செய்வதற்கான ஏற்பாடுகளை விதிப்பதற்காக 1979 ஆம் ஆண்டின் 15 இலக்க குற்றவியல் நடைமுறைக் கோவை சட்டத் (உடலியல் தண்டனை) திருத்தத்துக்கு 2024-04-29 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய, ஏற்புடையா பணிகளுக்கு திருத்த சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கு தற்போதைய அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரத்தை வழங்குவதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் - 12 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - வைகாசி 29
நல்ல நேரம் : 10.00 - 12.30
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : பிரதமை




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லை என்று ஆதங்கப்படுவீர்கள். வேலையாட்களிடம் போராட வேண்டியிருக்கும். மறதியால் பிரச்னை வரக்கூடும்.

**இடபம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் அதிகாரி உங்கள் புதிய முயற்சியை பாராட்டுவார். நன்மை நடக்கும் நாள்.

**மிதுனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகளின் பெருமைகளை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

**கடகம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். சில சூட்சுமங்களை உணர்வீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். உங்களின் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும்.

**துலாம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். அதிரடியான மாற்றம் உண்டாகும்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
மறைமுக விமர்சனங்களும் எதிர்காலம் பற்றிய பயம் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள்.

**மகரம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சி களில் கலந்து கொள்வீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் கடமை உணர்வுடன் செயல்பட தொடங்குவீர்கள். உங்கள் கை ஓங்கும்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் புதுவாடிக்கையாளர்கள் வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளின் நம்பிக்கையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். மனசாட்சிபடி செயல்பட வேண்டிய நாள்.

# வடக்கில் உள்ள அனைத்து புதைகுழிகளின் அகழ்வுப் பணிகளையும் தொடரவேண்டும்!

## தமிழ் அரசுக் கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 12
செம்மணி மனித புதைக்குழியின் அகழ்வுப்பணிகள் தொடரப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், அரசாங்கம் உண்மைகளை கண்டறிவதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவிக்கையில்-

செம்மணியில் மனிதப் புதைகுழி தோண்டப்பட்டபோது அதற்கு அண்மையில் மனிதப்புதைகுழிகள் இருப்பதற்கான ஏதுநிலைகள் காணப்பட்டன என்று செய்திகள் வந்துள்ளன.

முன்னதாக, செம்மணிப் பகுதியில் கிருஷாந்தி படுகொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் இறுதி தருணத்தில் தெரிவித்த விடயங்களின் அடிப்படையில் தான் செம்மணியில் அகழ்வுகள் செய்யப்பட்டன.

ஆனாலும் அந்த அகழ்வுப் பணிகள் நிறைவடைற்கு முன்னதாகவே அப்பணிகள் கிடப்பில் போடப்பட்டன. அதற்குப் பின்னராக பல்வேறு இடங்களில் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதனடிப்படையில் வடக்கு மாகாணத்தில் மட்டும் குறைந்தது 13 இடங்களில் மனிதப்புதைகுழிகள் இருப்பதாக அடையாளப்படுத் தப்பட்டுள்ளன.

மன்னாரில் மனிதப்புதைகுழி கண்டறியப்பட்டு அகழப்பட்டபோதும் அது முன்னெடுக்கப்படவில்லை. பின்னர் கொக்குத்தொடுவாயில் மனிதப்புதைகுழி கண்டறியப்பட்டு அகழப்பட்டபோதும் அப்பணிகளும் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அவ்வாறான நிலையில் செம்மணிப்புதைகுழி அகழ்வுப்பணிகள் இடைநிறுத்தப்படக்கூடாது. விசேடமாக அங்கு இளம்பிள்ளைகள், பெண்கள் அடித்துக்கொல்லப் பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. ஆகவே இதற்குப் பின்னால் என்ன நடைபெற்றுள்ளது, யார் இதற்கு காரணமானவர்கள், எந்தக்கால கட்டத்தில் நடைபெற்றது என்பதுள்ளிட்ட அனைத்து விடயங்களும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

ஆகவே செம்மணி புதைகுழியின் அகழ்வுச் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதோடு பணமில்லையென்றோ வேறு காரணங்களைக் கூறியோ அப்பணிகள் இடை நிறுத்தப்படக்கூடாது-என்றார். (அ)

# வவுனியாவில் மரக்கடத்தல் முறியடிப்பு



வவுனியா, ஜூன் 12
வவுனியாவில் பல்வேறு இடங்களில் வனவள திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போது சட்டவிரோத முறையில் கடத்த முற்பட்ட முதிரை மரக்குற்றிகளினை மீட்கப்பட்டுள்ளதாக வனவளத்திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

வனவளத்திணைக்க ளத்தினருக்கு கிடைத்த இரகசிய தகவலினையடுத்து மாவட்ட வனவளத் திணைக்கள அதிகாரி அஜித் ஜயசிங்கவின் நெறிப்படுத்தல் இன் கீழ் வட்ட வனவள அதிகாரி உடார சஞ்சீவவின் தலைமையிலான வனவள உத்தியோகத்தர்கள் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து ஓமந்தை மற்றும் கூமாங்குளம் பகுதியில் விசேட நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையின்போது 27 முதிரைக் குற்றிகள் மீட்கப்பட்டதுடன் இரு கப் ரக வாகனங்களும் மீட்கப்பட்டன.

இதேவேளை, வவுனியாவில் உள்ள மரக்காலையில் இருந்து அனுமதி பெறப்படாத 13 இலட்சம் ரூபா பெறுமதியான தேக்கு மரப் பலகைகள் மீட்கப்பட்டதுடன், பறயநாளங்குளம் பகுதியில் காடழிப்பில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், காடழிப்புக்கு பயன்படுத்திய டோசர் வாகனமும் கைப்பற்றப்பட்டது.

குறித்த சம்பவங்கள் தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டனர். (அ)

# ஏழாலையில் இளைஞரின் மீது வன்முறை கும்பல் வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், ஜூன் 12
யாழ்ப்பாணத்தில் வன்முறைக் கும்பல் ஒன்று இளைஞர் மீது மேற்கொண்ட வாள்வெட்டு தாக்குதலில், அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏழாலைப் பகுதியை சேர்ந்த இளைஞர் மீது , இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் கொண்ட வன்முறைக் கும்பல் வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த சுன்னாகம் பொலிஸார் , வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஒருவரை கைது செய்துள்ளனர்.

ஏனைய மூவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கையை எடுத்துள்ள பொலிஸார், தாக்குதல் முன் பகை காரணமாக இடம்பெற்றதாக தெரிவித்தனர். (அ)

# சுதுமலை அம்மன் தேரின்போது மூவரின் தங்கச் சங்கிலி மாயம்!

யாழ்ப்பாணம் , ஜூன் 12
சுதுமலை அம்மன் கோவில் தேர்த்திருவிழாவின்போது மூன்று பக்தர்களின் சுமார் 06 பவுண் தங்கச் சங்கிலிகள் அறுக்கப்பட்டுள்ளன.

ஒன்றரை பவுண் சங்கிலிகள் இரண்டும் , மூன்று பவுண் சங்கிலி ஒன்றும் அறுக்கப்பட்டுள்ளதாக மூவர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தேர்த்திருவிழாவின்போது, பெருமளவான பக்தர்கள் ஆலயத்தில் கூடியிருந்தவேளை பக்தர்கள் மத்தியில் புகுந்த திருடர்கள் தம் கைவரிசையை காட்டியுள்ளதாகவும், அவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு துறைமுகத்திலிருந்து கொள்கலன் விடுவிப்பில் தாமதம்!

## தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 12

**கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன்கள் விடுவிப்பதில் கால தாமத நிலை உருவாகியுள்ளது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

அண்மையில் சுமார் 323 கொள்கலன்கள் சர்ச்சைக்குரிய முறையில் விடுவிக்கப்பட்ட சம்பவத்தின் காரணமாக சுங்க அதிகாரிகள் அனைத்து கொள்கலன்களையும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தும் முடிவெடுத்துள்ளனர் என அவர் கூறினார்.

இதன் காணமாக இவ்வாறு கால தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்பொழுது ஒவ்வொரு கொள்கலனையும் வெளியேற்ற குறைந்தது ஏழு மணிநேரம் பிடிக்கின்றது.

இது முன்னர் வெறும் இரண்டு மணி நேரத்தில் முடிந்து வந்ததுடன் மிகுந்த வேகமான செயல்முறையாக இருந்தது.

அண்மைய சர்ச்சைக்குப் பின் உயர் அதிகாரிகளிடம் இருந்து கடும் எச்சரிக்கைகளை பெற்ற சுங்க அதிகாரிகள் தற்போது தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசு தரப்பினரின் அழுத்தங்களுக்கு அஞ்சாது செயற்படுமாறு சுங்க அதிகாரிகளை கோருகிறேன்.

மேலும், விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில் வெடிபொருட்கள் இருக்கவில்லை என சுங்க அதிகாரி சீவலி அருகொட அண்மையில் வெளியிட்ட கருத்தை நிராகரிக்கிறேன்.

இந்த விவகாரம் தொடர்பான உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வர வேண்டும். தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்வு

கொழும்பு, ஜூன் 12

மத்திய மலை நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலையை தொடர்ந்து நுவரெலியா மாவட்டத்தில் கடும் மழை பெய்து வருகிறது.

நேற்று முன் தினம் இரவு முதல் நுவரெலியா மாவட்டத்தில் பல பகுதிகளில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக ஆறுகள் நீரோடைகள் ஆகிய பெருக்கெடுத்துள்ளன.

நீரேந்தும் பிரதேசங்களில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதன் காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளன.

இதனால் மேல் கொத்மலை நீர்த்தேகத்தின் ஒரு வான்கதவு நேற்று அதிகாலை திறக்கப்பட்டது.

மேலும், காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

நோர்ட்டன்பிரிட்ஜ் பகுதியில் அமைந்துள்ள விமல சுரேந்திர நீர்த்தேக்கப் பகுதியில் கடுமையான மழை பெய்து வருவதனால் அந்த நீர்த்தேக்கத்தில் ஆறு கதவுகள் ஊடாக நீர் வான்பாய்கின்றது.

எனவே நீர்த்தேக்கத்திற்கு கீழ் தாழ் நிலப்பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# பஸ் விபத்தில் 15 பேர் காயம்!



கொழும்பு, ஜூன் 12

கொழும்பு, ஒருகொடவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் 15 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


இந்த விபத்து நேற்று புதன் கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

தனியார் பஸ் ஒன்று வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது பஸ்ஸில் பயணித்த 15 பேர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# நுவரெலியாவில் காற்றுடன் கூடிய மழையால் பாதிப்பு!



கொழும்பு, ஜூன் 12

மலையகத்தில் தொடரும் சீரற்ற காலநிலையினால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

நேற்று முன் தினம் இரவு வீசிய கடும் காற்றுடன் கூடிய மழையில் நுவரெலியா-ஹற்றன் பிரதான வீதியில் கொட்டகலை கொமர்சல் பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்த்துள்ளது.

இதனால் ஒருவழி போக்குவரத்து இடம்பெற்று வருகிறது. அதேபோல நோட்டன், மஸ்கெலியா பிரதான வீதியின் இரண்டாம் கட்டைப்பகுதியிலும் பாரிய மரமொன்று வீதியில் வீழ்ந்துள்ளமையினால் குறித்த வீதியின் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டது.

கடும் காற்றுடன் கூடிய மழை காலநிலை நிலவி வருகின்றமையினால் மண்மேடுகள் சரிந்து விழும் அபாயம் காணப்படுவதுடன், விதிகள் வழுக்கும் தன்மை காரணமாக சாரதிகள் அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)

## கைக்குண்டுடன் சிப்பாய் கைது!

கொழும்பு, ஜூன் 12

கொழும்புக்கு அருகே நடை பெற்ற பொலிஸ் சோதனை நடவடிக்கை யொன்றின்போது கைக்குண்டு ஒன்றுடன் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்புக்கு அருகே கட வத்தைப் பிரதேசத்தில் மஹ கடே சந்தியில் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

முச்சக்கர வண்டியொன்றை நிறுத்தி பொலிஸார் சோதனை யிட்டபோது அதற்குள் இருந் தவர்களிடம் இருந்து கைக் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அதனையடுத்து முச்சக்கர வண்டியில் பயணித்த மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கோணஹேன, கட வத்தை, எல்பிட்டிய பிரதேசங்களைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் உள்ளடங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் உயர்வு

கொழும்பு, ஜூன் 12

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக ஜூன் மாதம் டெங்கு பரவல் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு பெருகக்கூடிய இடங்களை அழித்து துப்பரவுபடுத்துமாறு சமூக மருத்துவ நிபுணர் பிரஷீலா சமரவீர பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

கடந்த வருடத்தில் நாடளாவிய ரீதியில் 25,259 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், 13 உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பண்டாரவளை மாநகர சபை அதிகாரத்தை முழுமையாகக் கைப்பற்றியது அநுர தரப்பு!

கொழும்பு, ஜூன் 12

பண்டாரவளை மாநகர சபையின் மேயர் பதவியை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றிக் கொண்டது.

நேற்று நடைபெற்ற பண்டாரவளை மாநகர சபையின் மேயர் பதவிக்கான வாக்கெடுப்பில் தேசிய மக்கள் சக்தியின் சாகரதீர விஷ்வ விக்கிரம வெற்றி பெற்றுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் ஆறு உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சைக்குழு 01 மற்றும் 02 ஆகியவற்றின் தலா ஒவ்வொரு வாக்குகள் பெற்று மொத்தமாக எட்டு உறுப்பினர்களின் ஆதரவை அவர் பெற்றுக் கொண்டார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுயேச்சைக்குழு -01 இன் தலைவர் முஹம்மத் நௌஷாத், நான்கு வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொண்டார்.

பிரதி மேயராக சுயேச்சைக் குழு-01 ஐச் சேர்ந்த ஸ்ரீகாந்த் என்பவர் தெரிவு செய்யப்பட்டார்.

இதன்போது அவரை எதிர்த்து முஹம்மத் நௌஷாத் மீண்டும் போட்டியிட்டார்.

எனினும் முன்னைய நான்கு வாக்குகள் மாத்திரமே இம்முறையும் அவருக்கு கிடைத்தன.

பண்டாரவளை மாநகர சபையின் மேயர் மற்றும் பிரதி மேயர் தெரிவில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கலந்து கொள்ளாமல் தவிர்த்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 'சுமேதா'வை கண்டுபிடித்த அதிகாரிகள்

கொழும்பு, ஜூன் 12

கடந்த மார்ச் மாதம் 7ஆம் திகதியன்று மரதன்கடவல, கல பிடகலாவில் நடந்த வீதி விபத்துக்குப் பிறகு காணாமல்போன 'சுமேதா' யானை மின்னேரியா தேசிய பூங்காவில் காணப்பட்டதாக தேசிய பூங்காவின் செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

லொறியுடன் மோதிய பின்னர்சுமேதா காணாமல்போயுள்ளது. சம்பவத்தைத் தொடர்ந்து, சிறப்புப் பணிக்குழு மற்றும் வனவிலங்கு அதிகாரிகள் இணைந்து விரிவான தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட யானையின் தந்தங்களில் ஒன்று பாதிக்கப்பட்டுள்ளது. யானை நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாவும் சிகிச்சை வழங்கப்படுகின்றது எனவும் பூங்காவின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரக நோயாளிகளுக்கான பரிசோதனைகளில் நெருக்கடி!

## இரசாயனங்கள் பற்றாக்குறை

கொழும்பு, ஜூன் 12

**கல்லீரல் மற்றும் சிறுநீரக மாற்று நோயாளிகளுக்கு அவசியமான டக்ரோலிமஸ் அளவுச் சோதனைகள், மற்றும் சோதனைக்குத் தேவையான இரசாயனங்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இதன் காரணமாக, அரசு மருத்துவமனைகளில் குறித்த நோயாளிகளுக்கான சிகிச்சைகள் காலவரையின்றி தாமதமாகி வருவதாக அரச மருத்துவமனை ஆய்வக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு தேசிய மருத்துவமனையின் ஆய்வக அதிகாரிகளின் கூற்றுப்படி, இரசாயன பற்றாக்குறை காரணமாக கடந்த மூன்று மாதங்களாக இந்த சோதனை மேற்கொள்ளப்படவில்லை.

இந்தநிலையில், குறித்த இரசாயனங்கள் இல்லாததால் தனது அமைப்பும் நெருக்கடியை எதிர்கொள்கிறது என்பதை இலங்கை மருந்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் சுரங்கா தொலமுல்ல குறிப்பிட்டார்.

டக்ரோலிமஸ் அளவு சோதனை என்பது ஒரு முக்கியமான சோதனையாகும், இது ஒரு மருத்துவர் பரிந்துரைத்தபடி, மாற்று அறுவை சிகிச்சைக்குப் பின்னர் நோயாளிகளுக்கு மாதந்தோறும் அல்லது ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் செய்யப்பட வேண்டும்.

சோதனை முடிவுகளின் அடிப்படையில் டக்ரோலிமஸ் அளவுகள் நிலையான வரம்பிற்குக் கீழே இருந்தால், அதன் அளவை அதிகரிக்கவேண்டும்.

அளவுகள் மிக அதிகமாக இருந்தால், கடுமையான பக்க விளைவுகளைத் தவிர்க்க அளவைக் குறைக்க வேண்டும்.

இந்தநிலையில் டக்ரோலிமஸ் அளவை சரியாகக் கண்காணித்து சரி செய்யத் தவறினால், அது உயிருக்கு ஆபத்தானது என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

தற்போது பெரும்பாலான அரச மருத்துவமனைகளில் இந்த சோதனை கிடைக்கவில்லை. தனியார் மருத்துவமனைகள் சுமார் 26,000 ரூபாய் செலவில் இந்த பரிசோதனையை வழங்குகின்றன.

இருப்பினும், இது அனைத்து சாதாரண மக்களுக்கும் தாங்க முடியாத செலவாகும் என்று மருத்துவத்துறை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# பயிரிடப்படாத காணிகளை குறி வைக்கிறது அரசாங்கம்!

கொழும்பு, ஜூன் 12

நாட்டின் அனைத்து பயிரிடப்படாத காணிகளையும் ஒன்றாக இணைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போது, விவசாய அமைச்சர் கே.டி லால் காந்த இதனை தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையுடன் இணைந்து, கந்தளாய் சீனித் தொழிற்சாலை தளத்தில் 2,000 ஏக்கர் சோள பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதன்படி, இந்த நடவடிக்கை நேற்று முதல் முன்னெடுக்கப்படுகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் பயிரிடப்படாத நிலங்களைப் பயன்படுத்தி நாட்டின் விவசாய உற்பத்தியை மேம்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# யூத வழிபாட்டு தலங்களுக்கு கடும் பொலிஸ் பாதுகாப்பு!

கொழும்பு, ஜூன் 12

இலங்கையில் உள்ள இஸ்ரேலிய பிரஜைகளுக்காக பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்ட யூத வழிபாட்டு மையங்கள் மீது கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டதையடுத்து நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து யூத வழிபாட்டு மையங்களுக்கும் 24 மணிநேர பாதுகாப்பை வழங்குவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள இஸ்ரேலிய பிரஜைகளுக்கு தனிப்பட்ட ரீதியில் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டால் அவர்களுக்கு தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# குரோத உணர்வுடன் செயல்படுகிறது அரசு!

## சன்ன ஜயசுமண குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 12

அரசாங்கம் குரோத உணர்வுடன் செயற்பட்டு வருவதாக முன்னாள் இராஜாங்க அமைச்சரும் சர்வஜன பலய கட்சியின் உப தலைவருமான கலாநிதி சன்ன ஜயசுமண குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் குரோதம், துவேசம், பழிவாங்கல், பலவந்தம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நம்பிக்கை மிகவும் முதன்மையானது என பௌத்த மத சிந்தனைகளில் கூறப்பட்டுள்ள நிலையில், நம்ப முடியாத ஓர் தரப்பிடம் நாடு ஒப்படைக்கப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

76 ஆண்டு கால சாபம் பற்றி பேசி ஆட்சி பீடம் ஏறிய அரசாங்கம், புதிய வேலைகளை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. எனினும் நாட்டை பின்னோக்கி நகர்த்தி விடக்கூடாது என சன்ன ஜயசுமண கூறினார். (அ)

# முறைகேடுகளில் ஈடுபடும் சிறைச்சாலை வைத்தியர்கள்

கொழும்பு, ஜூன் 12

சிறைச்சாலை வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியர்கள் தங்கள் சலுகைகளைத் தவறாகப் பயன்படுத்தி, முறைகேடுகளில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் மீது முறையான விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வைத்திய மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்களின் தொழிற்சங்கக் கூட்டணியின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

அரசியல் தலைவர்கள் மற்றும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்டவர் களுக்கு, சிறைச்சாலை வைத்தியசாலைகளில் விசேட சலுகைகள் வழங்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த விசேட வசதிகளை வழங்குவதற்கு, தவறான வைத்திய அறிக்கைகளும் சிறைச்சாலை வைத்தியசாலைகளில் வழங்கப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் வைத்தியர்கள் மீது, நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என வைத்திய மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்களின் தொழிற்சங்க கூட்டணியின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ கோரியுள்ளார். (அ)

# சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு கடும் பாதுகாப்பு

கொழும்பு, ஜூன் 12

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட பின்னர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய வுக்கு விசேட பாதுகாப்பு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பொதுமன்னிப்பை துஷ்பிரயோகம் செய்து சிறைக் கைதியொருவரை விடுதலை செய்த குற்றச்சாட்டில் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் சிறைச்சாலை ஆணையாளர் ஜெனரல் துஷார உபுல்தெனிய, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அதன் பின்னர், கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரான துசார உபுல்தெனிய சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தர்ஷன குருப்பு, தனது கட்சிக்காரருக்கு பாதாள உலகக் கும்பல்களின் அச்சுறுத்தல் இருப்பதன் காரணமாக சிறைச்சாலையில் விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்.

சந்தேக நபரின் சட்டத்தரணி முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதவான் அவருக்குப் போதுமான பாதுகாப்பு வழங்குமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# கைதியின் விடுதலைக்கு ஜனாதிபதியே பொறுப்பு

## சுட்டிக்காட்டுகிறார் திலித் ஜயவீர

கொழும்பு, ஜூன் 12

சட்டவிரோதமான முறையில் கைதி விடுதலை செய்யப்பட்ட விவகாரத்துக்கு ஜனாதிபதியே பொறுப்பு என சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

எனவே இந்த தவறுக்காக ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பி வைக்கவேண்டுமென அவர் கூறினார். தான் விடுதலை செய்த கைதி பற்றி தனக்கு தெரியவில்லை என ஜனாதிபதி கூறும்போது, காலையில் பத்திரிகைகளின் ஊடாகவே விடயங்களை அறிந்து கொண்டேன் எனக் கூறிய ஜனாதிபதியே நினைவுக்கு வருகின்றார் என அவர் சுட்டிக்காட்டினார்.

கைதி விடுதலை செய்யப்பட்ட விவகாரத்தில் நியாயமற்ற வகையில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தக் குற்றச் செயலுக்காக ஜனாதிபதியே வீட்டுக்கு செல்ல வேண்டுமெனவும் திலித் ஜயவீர சுட்டிக்காட்டினார். (அ)

# பதற்றத்தில் சிறை அதிகாரிகள்!

கொழும்பு, ஜூன் 12

விசேட தினங்களில் ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட கைதிகளின் பட்டியலில் பெயர்கள் சேர்க்கப்படாத கைதிகள் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பான விசாரணை தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பல மூத்த சிறை அதிகாரிகளிடம் விசாரணை நடத்த தயாராகி வருகின்றது.

சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்ட கைதிகளை அடையாளம் காணும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

அவர்களை கைது செய்து மீண்டும் சிறையில் அடைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [illegible] இதுபோன்ற சம்பவங்கள் சிறையில் நடந்து வருவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. "இந்த சம்பவங்கள் அனுராதபுரம் சிறையில் மட்டுமல்ல. வேறு பல சிறைகளிலும் நடந்துள்ளன. எனவே, அனைத்து சிறைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்ட கைதிகளின் பதிவுகள் ஏற்கனவே ஆய்வு செய் யப்பட்டு வருகின்றன.

விசாரணைகள் முடிவடையும் நேரத்தில் மேலும் பல சிறை அதிகாரிகள் கைது செய்யப் படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்," என்று மூத்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறல் உறுதிமொழியை நிறைவேற்ற வலியுறுத்தவேண்டும்!

## ஜேர்மனியிடம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை

நியூயோர்க், ஜூன் 12

**பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் தொடர்பான தமது உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை ஜேர்மனி வலியுறுத்தவேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.**

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உத்தியோகபூர்வ பயணமாக ஜேர்மனி சென்றுள்ளார். இந்த நிலையிலேயே மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேற்கண்டவாறு கூறியுள்ளது.

நாட்டில் 30 வருடங்களுக்கும் மேலாக போரின்போது, கொலைகள், சித்திரவதை, பாலியல் வன்புணர்வுகள் உட்பட பல துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பெரஹராவில் குழம்பிய யானையால் பதற்றம்!

கொழும்பு, ஜூன் 12

பதுளையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற மிஹிந்து பெரஹராவின்போது, யானையொன்று குழம்பியதால் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இருப்பினும் இந்த சம்பவத்தில் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்த பெரஹரா ஆண்டுதோறும் பதுளை, சத்தர்மானந்த பிரிவேனா விகாரையால் ஏற்பாடு செய்யப்படுகிறது.

யானைகள், நடனங்கள் உள்ளிட்ட பல அம்சங்களுடன் நேற்று முன் தினம் இரவு பெரஹரா நடைபெற்றது.

இதன்போது வீதி உலாவில் ஈடுபட்ட யானையொன்று திடீரென குழம்பியதால் பெரஹராவில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இருப்பினும், சிறிது நேரத்திற்குள் யானையை, பாகன் அமைதிப்படுத்தியதை அடுத்து, பெரஹெரா மீண்டும் தொடங்கியது. (அ)

# அநுரகுமாரவுக்கு எதிராக ஜேர்மனியில் போராட்டம்




பேர்ளின், ஜூன் 12

இலங்கை ஜனாதிபதி வருகையை எதிர்த்து பேர்ளினில் வெளிநாட்டு அலுவலகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இலங்கை தூதரகத்தின் முயற்சிகளையும் மீறி, பேர்ளின் நகரில் உள்ள வெளிநாட்டு அலுவலகம் முன்பாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் திரண்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதில் தமிழர்களுடன் மற்ற மக்களும் கலந்து கொண்டு தங்களின் ஒற்றுமையையும் ஆதரவையும் வெளிப்படுத்தினர்.


இலங்கை ஜனாதிபதி வருகையையொட்டி ஈழத்தமிழர்களின் உண்மையான நிலைமையை வெளிப்படுத்தும் துண்டுப்பிரசுரங்கள் ஜேர்மன் மொழியில் பகிரப்பட்டன. உரைகளும் நிகழ்த்தப்பட்டன.

ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினரும் "டை லிங்" கட்சியைச் சேர்ந்தவருமான பெரற் கொகாக் இந்த போராட்டத்தில் கலந்துகொண்டு தமிழர்களுக்கு தனது உறுதுணையைக் காண்பித்ததோடு ஈழத்தமிழர்கள் சார்ந்த ஜேர்மன் நாட்டின் மௌனத்தையும் கண்டித்தார்.

தொடர்ந்து குர்த் சமூக பிரதிநிதிகளும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் தங்களது உரைகளை நிகழ்த்தினார்கள். இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து அவர்கள் அக்கறை தெரிவித்தனர்.

கால நிலை சீராக இல்லாத நிலமையிலும் போராட்டம் உணர்வுபூர்வமாகவும் உற்சாகமாகவும் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# கிழக்குக் கொள்கலன் முனையத்தின் முன்னேற்றத்தை ஆய்வு செய்த பிமல்!



கொழும்பு, ஜூன் 12

போக்குவரத்து மற்றும் துறைமுக அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் பிரதி அமைச்சர் ஜனிதா ருவான் கொடிதுவக்கு ஆகியோர் நேற்று முன்தினம் மாலை கிழக்கு கொள்கலன் முனையம் மேம்பாட்டுத் திட்டத்துக்கு அறிவிக்கப்படாத ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டனர்.

இந்தப் பயணத்தின்போது, கட்டுமானப் பணிகளின் முன்னேற்றத்தை அமைச்சர் ஆய்வு செய்தார்.

மேலும், கிழக்கு கொள்கலன் முனையத்தில் குறைந்த பட்சம் 50 வீத செயல்பாடுகள் இந்த ஆண்டுக்குள் தொடங்கப்படும் என்றும், முனையத்தின் முழுமையான பணிகளை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

2014 மற்றும் 2022 இற்கு இடையில் எந்த கட்டுமானமும் நடைபெறவில்லை என்றும், ஆனால் 2022 முதல், குறிப்பாக தற்போதைய நிர்வாகத்தின் கீழ் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கிழக்கு கொள்கலன் முனையம் என்பது துறைமுகத் தொழிலாளர்களால் பாதுகாக்கப்பட்ட ஒரு கடின உழைப்பால் பெறப்பட்ட தேசிய சொத்து என்றும், அது எந்த வெளி தரப்பினரிடமும் ஒப்படைக்கப்படாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவர், துணைத் தலைவர், திட்ட பணிப்பாளர் மற்றும் பிற அதிகாரிகள் ஆய்வில் இணைந்தனர். (அ)

## இரு மதுவரி அதிகாரிகள் கைது!



கொழும்பு, ஜூன் 12

மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவு அதிகாரிகள் நடத்திய சோதனையில், இந்தியாவில் இருந்து படகு மூலம் நாட்டுக்கு சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 1200 கிலோ கிராம் பீடி சுற்றும் இலைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு பகுதியில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அவற்றை ஏற்றிச் சென்ற லொறியின் சாரதி மற்றும் மற்றொரு சந்தேக நபரும் இதன்போது கைது செய்யப்பட்டனர்.

இந்த பீடி சுற்றும் இலைகளை ஏற்றிச் செல்வதற்காக இரண்டு மதுவரி அதிகாரிகள் பாதுகாப்பு அளித்துள்ளதுடன், அவர்கள் இருவரும் கைது செய்யப் பட்டனர்.

இந்த பீடி சுற்றும் இலைகளின் பெறுமதி சுமார் 1 பில்லியன் ரூபாய் என தெரிவிக்கப்படுகிறது.

## பேராதனை - கண்டி ரயில்கள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 12

கண்டிக்கும் பேராதனைக்கும் இடையிலான ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

கண்டி நீதிமன்றத்துக்கு அருகிலுள்ள தண்டவாளத்தில் ஏற்பட்ட தாழிறக்கம் காரணமாக இவ்வாறு ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஜனாதிபதியின் பொதுமன்னிப்புக்கான நிபந்தனைகள் இனி கடுமையாக்கப்படும்



கொழும்பு, ஜூன் 12

இலங்கையில் தேசிய நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு வழங்கப்படும் ஜனாதிபதியின் பொதுமன்னிப்புக்கான நிபந்தனைகளை, இனிவரும் காலங்களில் நீதி அமைச்சு கடுமையாக்கும் என்று நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பொது மன்னிப்பின் கீழ் கைதிகளை விடுவிப்பதில் அண்மையில் கண்டறியப்பட்ட முறைகேடுகளைக்கருத்திற் கொண்டு இந்த செயற்பாடு நடைமுறைக்கு வருவுள்ளதாக அவர் கூறினார்.

தேசிய சுதந்திர தினம், விசாக பூரணை மற்றும் கிறிஸ் மஸ் போன்ற நிகழ்வுகளின் போது, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் சிறைக்கை திகள் விடுவிக்கப்படுகின்றமை வழமையாகும் என அவர் கூறினார்.

மேலும் இதற்காக, சிறை அதிகாரிகளால் விடுவிக்கப்பட வேண்டிய கைதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான அளவுகோலை நீதி அமைச்சு உருவாக்குகிறது.

எனினும், எதிர்காலத்தில் கைதிகளை விடுவிப்பதற்கான புதிய அளவுகோல்களை உருவாக்க ஒரு குழுவை நியமிக்கவுள்ளதாக நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்தார். (அ)

# 331 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 12

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது போதைப்பொருட்களுடன் 331 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 94 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 119 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 114 பேரும், ஹஷ் போதைப்பொருளுடன் 02 பேரும், கஞ்சா செடிகளுடன் 02 பேரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 98 கிராம் 901 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 198 கிராம் 826 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 334 கிராம் 631 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளும், 05 கிராம் 080 மில்லிகிராம் ஹஷ் போதைப்பொருளும், 348 கஞ்சா செடிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபைகளில் ஆட்சியமைக்க மு. கா. எமக்கு ஆதரவு தரும்

## ஒப்பந்தம் என்பது பொய் என்கிறது தமிழ் அரசு

மட்டக்களப்பு, ஜூன் 12

**சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் எமக்கு ஆதரவு தருவார்கள். நாம் அவர்களுக்கு ஆதரவு வழங்குவோம். ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளோம் என்று கூறுவது பொய் - இவ்வாறு கூறியுள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் இரா. சாணக்கியன் எம். பி.**


உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்கள் பதவியேற்பு நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு அமெரிக்க மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் மட்டக்களப்பு உட்பட வடக்கு, கிழக்கில் இலங்கை தமிழ் அரசு கட்சி பெரும் வெற்றி பெற்றிருக்கிறது. 2018ஆம் ஆண்டு தேர்தலுடன் ஒப்பிடுகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 86 உறுப்பினர்கள் நேரடியாக தெரிவாகியுள்ளனர்.

நாங்கள் போட்டியிட்ட 11 சபைகளிலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஏதோவொரு வகையாக ஆட்சி அதிகாரத்தை பெற வாய்ப்பு இருக்கிறது.

நாங்கள் போட்டியிட்ட அனைத்து சபைகளிலும் தவிசாளர் பதவி எங்கள் கட்சிக்குத் தான் கிடைக்க வேண்டும் என் பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். நாங்கள் சிறுபான்மையாக இருக்கும் ஓட்டமாவடி, ஏறாவூர் ஆகிய இரண்டு சபைகளிலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த எங்களுடைய உறுப்பினர்கள்தான் தவிசாளரை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கிறார்கள்.

தேர்தலுக்கு முன்பாக நாங்கள் சொன்னதற்கு இணங்க மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். எங்களுடைய உறுப்பினர்கள் வெற்றியடைந்திருக்கின்றார்கள். நாங்கள் சில சபைகளிலே முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சியமைக்க வேண்டிய தேவை இருக்கிறது - என்றார். (ஐ)



# போரதீவுப்பற்று பிரதேச சபையின் அமர்வு ஆரம்பம்!

மட்டக்களப்பு, ஜூன் 12


போரதீவுப்பற்று பிரதேச சபையின் முதல் அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

சபையின் தவிசாளர் விமலநாதன் மதிமேனன் தலைமையில் சபை அமர்வு நடைபெற்றது.

சபைக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் வரவேற்கப்பட்டமையை தொடர்ந்து சபை அமர்வு ஆரம்பமானது.

இந்த அமர்வில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், ஞா. சிறீநேசன் ஆகியோர் சபை நடவடிக்கைகளை பார்வையிட்டனர். (ஐ)





# மூதூர் அந்தோனியார் ம. வியின் ஆண்டு விழாவில் நடைபவனி!

திருகோணமலை, ஜூன் 12

திருகோணமலை மாவட்டத்தின் பழமையான பாடசாலைகளில் ஒன்றான மூதூர் அந்தோனியார் மகா வித்தியாலயத்தின் 160ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபவனி நடைபெற்றது.

பாடசாலை அதிபர் அருட்பணி கொன்பியுசியஸ் அடிகளார் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதில், பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நடைபவனிக்கு முன்னதாக பாடசாலை நுழைவு வாயிலை திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கிறிஸ்டியன் நோயல் இமானுவல் திறந்து வைத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை 20 முதல் ஜூலை 4 வரை திறக்கப்படும்

## அம்பாறை மாவட்ட அரச அதிபர் அறிவிப்பு

அக்கரைப்பற்று, ஜூன் 12

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவுக்கு செல்லும் பாதை யாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டு ஜூலை 04ஆம் திகதி மூடப்படும் என்று அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

கதிர்காமம் மற்றும் உகந்தை மலை முருகன் ஆலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை மாதம் 11ஆம் திகதி தீர்த்தோற்சவ அத்துடன் நிறைவடையும் என்றும் அவர் கூறினார்.

கதிர்காமத்துக்கு பாதயாத்திரையாக செல்வோர் உகந்தை மலை முருகன் ஆலயத்தில் ஓரிரு நாட்கள் தங்கியிருந்து குமண யால காட்டினூடாக பிரவேசித்து கதிர்காமத்தை சென்றடைவது வழக்கமாகும்.

20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை உகந்தைமலை முருகன் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் ஆரம்ப வைபவத்தை அடுத்து, காட்டுப்பாதை காலை ஆறு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை மாத்திரமே திறந்து இருக்கும் அந்தக் காலப்பகுதிக்குள் மட்டுமே காட்டுக்குள் செல்ல யாத்திரிகர்கள் அனுமதிக்கப்படுவார்கள் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# யானை தாக்கி ஒருவர் மரணம்

திருகோணமலை, ஜூன் 12

மாடுகளை தேடி காட்டுப் பகுதிக்கு சென்றர் யானை தாக்கிய உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன தினம் செவ்வாய்க்கிழமை பகல் திருகோணமலை - சேருநுவர - மகிந்தபுர காட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. வெருகல் - பூநகர் கிராமத்தை சேர்ந்த இராசையா கணேசன் (வயது 55) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்று காலை மேய்ச்சலுக்கு சென்ற தனது மாடுகளை தேடிச் சென்றவரே யானை தாக்கி உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பில் சேருநுவர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் கைது

மட்டக்களப்பு, ஜூன் 12

மட்டக்களப்பில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 44 வயது பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கருவப்பங்கேணியில் பொசன் போயா தினமான நேற்று முன் தினம் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே குறித்த பெண் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து, 100 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களை கைப்பற்றிய தாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான பெண்ணை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# உகந்தைமலையில் புத்தர் சிலை உள்ளது

## சிவில் சமூக அமைப்பு

திருக்கோவில், ஜூன் 12

உகந்தைமலை கடற்கரை யோர குன்றில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை உறுதியே என்று அம்பாறை சிவில் சமூக அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பினர் உகந்தை மலைக்கு களப்பயணம் சென்று இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளனர்.

அண்மையில், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. கோடீஸ்வரன் உகந்தை மலையில் அவ்வாறான புத்தர் சிலை எதுவும் வைக்கப்படவில்லை என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கல்முனையில் பௌர்ணமி கலைவிழா

அம்பாறை, ஜூன் 12

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், கல்முனை வடக்கு பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய ஆனி மாத பௌர்ணமி கலை விழா நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு கல்முனை வடக்கு பிரதேச செயலக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாண பணிப்பாளர் ச.நவநீதன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இந் நிகழ்வில் உள்ளூர் கலைஞர்களினதும் பாடசாலை மாணவர்களினதும் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் துப்பாக்கி சூடு; 11 பேர் உயிரிழப்பு; 11 பேர் காயம்!

## ஆஸ்திரியாவில் துயரம்



வியன்னா, ஜூன்12

**ஆஸ்திரியாவில் உயர்நிலை பாடசாலை ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 11 பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.**

ஆஸ்திரியாவின் கிராஸ் நகரில் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டை அந்தப் பாடசாலையில் படித்த முன்னாள் மாணவர் ஒருவரே நடத்தியுள்ளார். அவரும், பாடசாலையின் குளியலறையில் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் நடந்த இந்தத் தாக்குதலில் 7 பெண்களும் 3 ஆண்களுமாக 11 பேர் உயிரிழந்தனர். அத்துடன், 11 பேர் உயிரிழந்தனர். இவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு துப்பாக்கிதாரி 2 சட்டபூர்வ துப்பாக்கிகளை பயன்படுத்தியுள்ளார் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஆஸ்திரிய ஜனாதிபதி கிறிரியன் ஸ்ராக்கர் "நமது நாட்டின் வரலாற்றில் ஓர் இருண்ட நாள்", என்று கூறியுள்ளார். ஆஸ்திரிய போருக்கு பிந்தைய வரலாற்றில் நடந்த மிகக் கொடிய தாக்குதலாக இது அமைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக 3 நாட்களை தேசிய துக்கதினமாக அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது. (ஐ)



# உக்ரைன்மீது ஒரே இரவில் 500 ட்ரோன்கள் தாக்குதல்!

கீவ், ஜூன் 12

மூன்று ஆண்டுகளாக தொடரும் போரில் மிகப்பெரிய இரவு நேர ட்ரோன் தாக்குதலாக உக்ரைன் மீது ரஷ்யா சுமார் 500 ட்ரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியுள்ளது என உக்ரைன் விமானப் படை கூறியது.

உக்ரைன்மீது திங்கட்கிழமை இரவு 479 ட்ரோன்கள் ஏவப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன், 20 ஏவுகணைகள் பல்வேறு பகுதிகளில் ஏவப்பட்டன என்றும் உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது. ரஷ்யா முக்கியமாக மத்திய மற்றும் மேற்கு பகுதிகளை குறிவைத்து தாக்கியதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது.

உக்ரைனின் விமானப் படை தனது வான் பாதுகாப்பு அமைப்புகள் மூலம் 277 ட்ரோன்கள் மற்றும் 19 ஏவுகணைகளை இடைமறித்து அழித்ததாகவும், 10 ட்ரோன்கள், ஏவுகணைகள் மட்டுமே தங்கள் இலக்குகளை தாக்கின என்றும். இந்தத் தாக்குதல்களில் இருவர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், உக்ரைனின் கிழக்கு மற்றும் வடகிழக்கு பகுதிகளில் ரஷ்யா கைப்பற்றிய இடங்களில் இருந்து, இப்போது புதிய தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உதவி மையம் அருகே தாக்குதல் பலி எண்ணிக்கை 25ஆக உயர்வு



காசா, ஜூன் 12

காசாவின் ரபா நகரில் நேற்றுமுன்தினம் நிவாரண பொருட்கள் வழங்கும் முகாம் அருகே நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 25 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 14 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் பலி எண்ணிக்கை 25 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன், 70இற்கும் மேற்பட்டோர் இந்தத் தாக்குதலில் காயமடைந்துள்ளனர்.

இதனிடையே, இராணுவ முகாம் அருகே சந்தேகத்துக்கிடமான நபர்கள் இருந்தமையால் அவர்களை நோக்கி தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது. மேலும் ஹமாஸ் போராளிகள் வேண்டுமென்றே உதவி விநியோகத்தை சீர்குலைத்தனர் என்றும் அது கூறியுள்ளது.

ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023 ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியது. இதில், 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து காசா மீது இஸ்ரேல் படையெடுத்தது. இதனால், 54 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். ஒரு இலட்சம் வரையிலானோர் காயமடைந்துள்ளனர். (ஐ)

மகா கும்பமேளா நெரிசல்:

# உயிரிழந்தோர் எண்ணிக்கை 37 அல்ல 82 என்பதே உண்மை!

புதுடில்லி, ஜூன் 12

இந்தியாவில் மகா கும்பமேளாவில் பங்கேற்று உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37 அல்ல 82 அல்லது அதற்கும் அதிகம் என்று பி. பி. சி. தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி -பெப்ரவரி மாதம் நடந்த இந்த கும்பமேளா நிகழ்வு உத்தரப் பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்றது.

இறந்தோர் தொடர்பில் 11 மாநிலங்களில் 100இற்கும் மேற்பட்ட குடும்பங்களை சந்தித்து தகவல் பெறப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பிபிசி செய்தியாளர்கள் 11 மாநிலங்களில் 100க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சந்தித்து தகவல்களை பெற்றனர். இது தொடர்பான தெளிவான ஆதாரங்களையும் பி. பி. சி. வெளியிட்டுள்ளது.

இருப்பினும், உறுதியான ஆதாரங்கள் கிடைக்காததால், இன்னும் பல இறப்புகள் இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

மகா கும்பமேளாவில் உயிரிழந்தோரின் 37 குடும்பங்களுக்கு 25 இலட்சம் இந்திய ரூபாய் உத்தர பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் அளித்திருந்



தார். இவர்கள், தவிர 26 குடும்பங்களுக்கு 5 இலட்சம் இந்திய ரூபாய் வழங்கப்பட்டது. இந்தப் பணத்தை பொலிஸார் வழங்கியதுடன், இறந்தவர்களின் குடும்பத்தினர் கட்டாயப்படுத்தப்பட்டு ஒப்பம் பெறப்பட்டுள்ளது. அத்துடன், இறந்தவர்களுக்கான உண்மை காரணம் தெரிவிக்கப்படவில்லை. மேலும், நெரிசலில் உயிரிழந்தவர்களை நோயால் இறந்தனர் என்று கையொப்பமிடவும் உறவினர்கள் வற்புறுத்தப்பட்டனர் என்றும் பி. பி. சி. குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# சிறை பிடிக்கப்பட்ட தன்பர்க்கை நாட்டுக்கு அனுப்பியது இஸ்ரேல்!

ஜெருசலேம், ஜூன் 12

காசாவுக்கு நிவாரணம் கொண்டு சென்ற சுவீடனை சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலரான கிரேட்டா தன்பர்க் உள்ளிட்ட நால்வரை இஸ்ரேல் அவர்களின் நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைத்துள்ளது.

இத்தாலியின் சிசிலி தீவிலிருந்து புறப்பட்ட சரக்கு கப்பலில் சென்ற 12 பேரே இவ்வாறு இஸ்ரேல் கடற்படையால் வழிமறிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டனர்.

இவர்களில், கிரேட்டா தன்பர்க், பிரான்ஸ் நாட்டின் எம். பியான ரிமா ஹசன் உள்ளிட்ட நால்வர் சொந்த நாட்டுக்கு தனி விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.



கைதான ஏனைய 8 பேரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (ஐ)

# பிரிட்டன் பாதுகாப்பு செலவை உயர்த்துவதற்கு நேட்டோ ஆதரவு!

நியூயோர்க், ஜூன் 12

"பாதுகாப்பு செலவினங்களை வெகுவாக அதிகரிக்கும் பிரதமர் கெய்ர் ஸ்டார்மரின் திட்டத்தை இங்கிலாந்து செயல்படுத்தத் தவறினால், பிரிட்டிஷ் மக்கள் ரஷ்ய மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்", என்று நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ரூட்டே எச்சரித்துள்ளார்

"அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் நேட்டோ நாடுகளை குறிவைக்க ரஷ்யா தயாராக இருக்க முடியும். புதிய தலைமுறை ரஷ்ய ஏவுகணைகள் ஒலியின் வேகத்தை விட பல மடங்கு வேகத்தில் பயணிக்கின்றன. ஐரோப்பிய தலைநகரங்களுக்கு இடையிலான தூரம் சில நிமிடங்கள் மட்டுமே. இனி கிழக்கு அல்லது மேற்கு இல்லை. நேட்டோ மட்டுமே உள்ளது," என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, நேட்டோ நாடுகளை ரஷ்யா ஆக்கிரமிக்கத் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுவதை மேற்கத்திய அரசியல்வாதிகளின் அச்சுறுத்தல் என்று [illegible] நிராகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர். சி. பி. அணியை விற்பதற்கு திட்டம்!

பெங்களூரு, ஜூன் 12

பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் (ஆர். சி. பி. ) அணியை விற்பனை செய்வதற்கு அதன் உரிமையாளரான டயாஜியோ பி. எல். சி. நிறுவனம் பரிசீலிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் நிறைவடைந்த ஐ. பி. எல். தொடரில் பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணி சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

2008ஆம் ஆண்டு முதல் ஐ. பி. எல். தொடரில் விளையாடி வருகிறது பெங்களூரு அணி.

அந்த அணி மீது விமர்சனங்கள் பல இருந்தாலும் ரசிகர்களின் ஆதரவும் அதிகரித்தே வந்தது. இந்த நிலையில், 17 ஆண்டுகளுக்கு பின்னர் முதன்முறையாக சம்பியன் பட்டத்தை வென்றது பெங்களூரு அணி.

இதைத் தொடர்ந்து அந்த அணிக்கு அளிக்கப்பட்ட பாராட்டு நிகழ்வில் கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். இதுவும் அந்த அணிக்கு கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், அந்த அணியின் உரிமையாளரான டயாஜியோ பி. எல். சி. நிறுவனம் அந்த அணியை விற்பனை செய்ய பரிசீலித்து வருகிறது. இதற்காக 200 கோடி டொலர்கள் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 59 ஆயிரத்து 790 கோடி ரூபாய்) மதிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எனினும், இறுதி முடிவு எட்டப்படவில்லை.



இது அந்த அணியின் ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(ஐ)

## ரூ. 1.1 கோடிக்கு ஏலம் போனது நடாலின் ரென்னிஸ் ராக்கெட்!


பாரிஸ், ஜூன் 12


ரபேல் நடாலின் ரென்னிஸ் ராக்கெட் சுமார் ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்பனையாகியுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டு நடத்த பிரெஞ்சு ஒப்பன் ரென்னிஸ் தொடரில் ரபேல் நடால் பயன்படுத்திய ரென்னிஸ் ராக்கெட்டே இவ்வாறு விற்பனையாகியுள்ளது.

இந்த ரென்னிஸ் ராக்கெட் 57 ஆயிரம் டொலர்களுக்கு - நம் நாட்டு மதிப்பில் ஒரு கோடியே 71 இலட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. பிரெஞ்சு தொடரில் 24 போட்டிகளில் அவர் இந்த ரென்னிஸ் ராக்கெட்டை பயன்படுத்தியிருந்தார்.

முன்னதாக, கடந்த 2022ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய ஒப்பன் தொடரில் நடால் பயன்படுத்திய ராக்கெட் 1.39 இலட்சம் டொலருக்கு நம் நாட்டு மதிப்பில் 4 கோடியே 15 இலட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்பனையானமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





## ஒருநாள் அணியின் தலைமையிலிருந்து ரோகித் சர்மாவை நீக்குவதற்கு திட்டம்?

புதுடில்லி, ஜூன் 12

ஒருநாள் போட்டி அணிக்கான தலைமை பதவியலிருந்தும் ரோகித் சர்மாவை நீக்குவதற்கு இந்திய கிரிக்கெட் சபை திட்டமிடுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய கிரிக்கெட் அணியின் 3 வடிவிலான போட்டிகளுக்கும் ரோகித் சர்மா நியமிக்கப்பட்டிருந்தார். இவரின், தலைமையில் இந்திய அணி 2024 இருபது - 20 உலகக் கிண்ணத்தையும் சம்பியன்ஸ் கிண்ணத்தையும் கைப்பற்றியது.

2024 ரி -20 உலகக் கிண்ணத்தை வென்றதும் ரி-20 தொடரிலிருந்து ரோகித் சர்மா ஓய்வு பெற்றார். டெஸ்ட், ஒருநாள் தொடர்களில் விளையாடி வந்தார். இந்த நிலையில் திடீரென் டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக கடந்த மாதம் அறிவித்தார்.

38 வயதான ரோகித் சர்மா 2027 ஒருநாள் உலகக் கிண்ணத் தொடர் வரை விளையாடுவதை இலக்காக கொண்டுள்ளார். தான் ஒருநாள் போட்டியிலிருந்து ஓய்வு பெறப்போவதில்லை என்றும் அண்மையில் அவர் கூறியிருந்தார்

இந்நிலையில், இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைமை பதவியிலிருந்து ரோகித் சர்மாவை நீக்க இந்திய கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இருப்பினும் அவர் வீரராக தொடருவாரா? இல்லையா? என்பதை குறித்து எதுவும் முடிவெடுக்கப்படவில்லை எனவும் கூறப்படுகிறது. இது இந்திய கிரிக்கெட் உலகில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## ஹோல் ஒவ் பேம் பட்டியலில் எம். எஸ். டோனியின் பெயர்




டுபாய், ஜூன் 12


ஐ. சி. சியின் ஹோல் ஒவ் பேம் பட்டியலில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் எம். எஸ். டோனியின் பெயரும் இணைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிகெட்டில் சாதித்த வீரர்களை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி) ஹோல் ஒவ் பேம் பட்டியலில் இணைத்து கௌரவம் அளித்து வருகிறது.

இதில், டோனி தவிர அவுஸ்திரேலியாவின் முன்னாள் அதிரடி தொடக்க வீரர் மத்தியூ ஹைடன், தென்னாபிரிக்காவின் ஹசிம் ஆம்லா, கிரஹம் ஸ்மித், நியூசிலாந்தின் டானியல் விற்றோரி, பாகிஸ்தான் வீராங்கனை சனா மிர், இங்கிலாந்தின் சாரா ரெய்லர் ஆகியோரும் இந்த பட்டியலில் இணைந்துள்ளனர்.

இந்தப் பட்டியலில் இணையும் 11ஆவது இந்திய வீரர் டோனி ஆவார். சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற வீரர்களுக்கு 5 ஆண்டுகளின் பின்னர்தான் இந்த கௌரவம் அளிக்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சச்சினுடன் எனது பெயரும் இணைந்தமை கௌரவம்!




லண்டன், ஜூன் 12

இங்கிலாந்து - இந்தியா இடையேனான டெஸ்ட் தொடர் இனி, அண்டர்சன் - டெண்டுல்கர் கிண்ணத் தொடர் என்று பெயர் மாற்றப்பட்டது. சச்சின் போன்ற மிகப்பெரிய ஜாம்பவானுடன் எனது பெயரையும் சேர்த்து நீண்டகால இந்திய - இங்கிலாந்து டெஸ்ட் மரபில் எனை இணைத்திருப்பது பெருமையும் கௌரவமும் அளித்துள்ளது என்று அண்டர்சன் கூறியுள்ளார்.

### அண்டர்சன் கருத்து

16 வயதில் சர்வதேச கிரிக்கெட்டில் நுழைந்த சச்சின் டெண்டுல்கர் 200 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 15,921 ஓட்டங்களை எடுத்தார். ஜேம்ஸ் அண்டர்சன் 188 டெஸ்ட் போட்டிகளில் 704 டெஸ்ட் விக்கெட்களை வீழ்த்திய முதல் வேகப்பந்து வீச்சாளராகத் திகழ்கிறார். 2006-2012 வரை ஜேம்ஸ் அண்டர்சனும் சச்சின் டெண்டுல்கரும் 14 முறை களத்தில் நேரடியாகச் சந்தித்துள்ளனர். அண்டர்சன் டெண்டுல்கரை 9 முறை வீழ்த்தியுள்ளார்.

இது தொடர்பாக அண்டர்சன் கூறும்போது, “காலம் பறக்கிறது. லங்காஷயருக்காக இப்போது ஆடுகிறேன். நான் 50 விக்கெட்களை எடுக்கும் போது இப்போது ஆடும் வீரர்கள் யாரும் பிறந்திருக்க மாட்டார்கள். எனக்கு மிகவும் அதிசயமாக இருக்கிறது, காலம் ஓடுகிறது.

சச்சின் டெண்டுல்கருடன் என் பெயரையும் இணைத்து கிண்ணம் அறிவிக்கப்பட்டிருப்பது எனக்குக் கிடைத்த மிகப்பெரிய கௌரவம். என்னால் இன்னமும் நம்ப முடியவில்லை, நான் வளரும் காலங்களில் சச்சின் டெண்டுல்கர் துடுப்பாட்டத்தை பார்த்து அவரைப் பற்றிய பிம்பத்துடன்தான் வளர்ந்து வந்தேன் - என்று கூறியுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில்...

தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல முறைப்பாடு ஒன்றை அளித்தார். இது தொடர்பிலேயே ரணில் வாக்குமூலம் அளித்துள்ளார். இதற்காக அவர், நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந் தார். (ஐ)

## தமிழ் அரசு...

கைச்சாத்திடப்பட்டது. தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் விக்னேஸ்வரனும் தமிழ் அரசு கட்சியின் சார்பில் அதன் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரனும் ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டுள்ளனர்.

ஒப்பந்தத்தின் பிரகாரம், நல்லூர் பிரதேச சபையில் இரு கட்சிகளும் தலா 2 ஆண்டுகளுக்கு பங்கீட்டு ஆட்சி அமைக்கவுள்ளன. முதல் இரண்டு வருடங்களும் தமிழ் மக்கள் கூட்டணியை சேர்ந்தவர் தவிசாளராகவும் தமிழ் அரசு கட்சியை சேர்ந்தவர் உபதவிசாளராகவும் அடுத்த இரண்டு ஆண்டுகளும் தமிழ் அரசு கட்சியை சேர்ந்தவர் தவிசாளராகவும் தமிழ் மக்கள் கூட்டணியை சேர்ந்தவர் உப தவிசாளராகவும் பதவி வகிப்பர். அத்துடன், ஏனைய உள்ளூராட்சி சபைகளில் தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர்கள் இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு ஆதரவு வழங்குவார்கள் - என்றும் தெரிய வருகிறது. (ஐ)

## மனித...

வழங்குவோம், விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்று வெறும் வார்த்தைகளைக் கூறிவிட்டு அரசாங்கம் இருக்கக்கூடாது.

வடக்கில் செம்மணி உள்ளிட்ட பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்படும் எலும்புக்கூடுகளைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி, உண்மைகளை கண்டறிய அரசு முழு வீச்சுடன் செயல்பட வேண்டும்.

குற்றங்கள் நடந்திருப்பின் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் நீதிமன்றமும் நடுநிலையுடன் முழுகரிசனை செலுத்தும் என்று நம்புகிறோம்." - என்றார். (ஐ)

## மின்சார...

குறைக்கப்பட்டது. எனினும், 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போதைய அதிகரிப்பு 8 சதவீதம் குறைவாகவே உள்ளது என்று கூறப்படு கிறது.

வீடுகளுக்கான மின்சார கட்டணம், முதல் 30 அலகுகளுக்கு 20 ரூபாய் (ரூ. 215) அதிகரித்துள்ளது. இது 60 அலகுகளுக்கு 85 ரூபாய் (ரூ. 585) உயர்வடைகிறது. மேலும், 90 அலகுகளுக்கு 240 ரூபாயும் (ரூ. 1,720), 120 அலகுகளுக்கு 360 ரூபாயும் (ரூ. 3,040) 150 அலகுகளுக்கு 600 ரூபாயும் (ரூ. 4,770) 180 அலகுகளுக்கு 840 ரூபாயும் (ரூ. 6,000) 300 அலகுகளுக்கு 2,020 ரூபாயும் (ரூ. 13,920) அதிகரித்துள்ளன.

மத, தொண்டு நிறுவனங்களுக்கு முதல் 90 அலகுகளுக்கு எந்த அதிகரிப்பும் இருக்காது. தற்போதைய அலகு ஒன்றுக்கான கட்டணம் 4.50 ரூபாயாகவும் மாதாந்த கட்டணமான ரூ. 75, ரூ. 200 என்பன மாறாமல் இருக்கும். 90 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தும் போது 12 சதவீதம் கட்டணம் அதிகரிக்கும்.

இதேவேளை, மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டபோதிலும் 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த கட்டணம் என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் கே.பி.எல். சந்திரலால் தெரிவித்துள்ளார்.

மேலும், பொது நோக்க துறையினருக்கு 14 வீதமும், தொழில்துறையினருக்கு 15 வீதமும், ஹோட்டல் துறையினருக்கு 15 வீதமும் அரச நிறுவனங்களுக்கு 16 வீதமும் மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## மக்கள்...

மேடைக்கு மேடை அநுர குமார கூறினார். பின்னர், பொதுத் தேர்தலில் அக்கட்சி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை ஈட்டி 159 ஆசனங்களை தனதாக்கிய சந்தர்ப்பத்திலும்கூட மின்சாரக் கட்டணத்தை 33 வீதத்தால் குறைத்திருக்க வேண்டும். ஆனால், அது நடக்கவில்லை. நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அப்பட்டமாக மீறி, ஜனாதிபதியே தான் வெளியிட்ட அறிக்கைகளை பொய்களாக மாற்றும் வகையில், மின்சார கட்டணத்தை 15 வீதத்தால் அதிகரிக்க தற்போது இந்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கை, இந்த நாட்டின் மின்சார நுகர்வோரின் உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயல் - என்றும் சஜித் சொன்னார்.

## காற்றாலை...

பிரதான வீதி ஊடாக மன்னார் பஜாரை அடைந்து, அங்கிருந்து மாவட்ட செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, போராட்டக்காரர்கள், "மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டுவரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வை உடனடியாக நிறுத்து", "எங்கள் மண்ணை சுடுகாடாக்காதே", "அடிக்காதே, அடிக்காதே எங்கள் வயிற்றில் அடிக்காதே", என எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற மன்னார் மறைமாவட்ட ஆயர் ஞானப்பிரகாசம் ஆண்டகை சர்வமத தலைவர்களுடன் இணைந்து, ஜனாதிபதிக்கான மனுவை அரச அதிபர் க. கனகேஸ்வரனிடம் கையளித்தார். (ஐ)

## மட்டு...

உறுப்பினர் மா. சண்முகலிங்கம் முதல்வராக சிவம் பாக்கியநாதனை முன்மொழிந்தார். இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் ந. ரகுபரன் வழி மொழிந்தார். வேறு தெரிவுகள் இன்மை யால் மட்டக்களப்பு மாநகர முதல்வராக சிவம் பாக்கியநாதன் ஒருமனதாக தெரி வானார்.


பிரதி முதல்வருக்கான தெரிவில் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் து. மதன், தினேஷ்குமாரை முன்மொழிந்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் மீரா சாஹிபு ஆயிசா உம்மா வழிமொழிந்தார். இதேசமயம், அந்தப் பதவிக்கு க. சத்தியசீலனை சுயேச்சை குழு உறுப்பினர் சீ. ஜெயந்திரகுமார் முன்மொழிய, வி. வி.சசிகலா வழிமொழிந்தார்.

இதனால், பிரதி முதல்வர் தெரிவுக்கு வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, நடத்தப்பட்ட பகிரங்க வாக்கெடுப்பில் தினேஷ்குமாருக்கு ஆதரவாக 18 வாக்குகளும் சத்தியசீலனுக்கு ஆதரவாக 4 வாக்குகளும் கிடைத்தன. தேசிய மக்கள் சக்தி, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் 12 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். இதனால், பிரதி முதல்வராக தினேஷ்குமார் தெரிவானார்.

இந்த அமர்வில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், ஞா. சிறீநேசன், இ. சிறிநாத் உள்ளிட்ட பலர் பார்வையாளர்களாக பங்கேற்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, "மட்டக்களப்பு மாநகர சபையின் ஆட்சியை கைப்பற்ற பிள்ளையான் தரப்பின் ஆதரவை தேசிய மக்கள் சக்தி கோரியது. மாநகர சபையில் அதிகாரத்தை நிலைநாட்ட தேசிய மக்கள் சக்தி வழக்கத்துக்கு மாறான நடவடிக்கைகளைக்கூட மேற்கொண்டுள்ளது. எனினும், நாம் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவுடன் மாநகர அதிகாரத்தை கைப்பற்றியுள்ளோம்", என்று தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கூறியுள்ளார். (ஐ)

# ஜனாதிபதி அநுர குமாரவுக்கு ஜேர்மனியில் சிறப்பு வரவேற்பு



பேர்ளின், ஜூன் 12

ஜேர்மனிய கூட்டாட்சி குடியரசுக்கு உத்தியோகபூர்வ பயணமாக சென்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு, ஜேர்மன் ஜனாதிபதி பிராங்க் - வோல்டர் ஸ்டெய்ன்மியர் சிறப்பான வரவேற்பை அளித்தார்.

பேர்ளினின் பெல்வீவ் மாளிகைக்கு சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா முப்படை மரியாதையுடன் வரவேற்கப்பட்டார். அத்துடன், முப்படைகளின் அணி வகுப்பையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

வரவேற்பை தொடர்ந்து இரு நாடுகளின் தலைவர்களும் பேச்சுகளை முன்னெடுத்தனர். இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, சர்வதேச உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது. மேலும், தொழில் பயிற்சி மற்றும் சுற்றுலா, கைத்தொழில் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. (ஐ)

# மரக்கறி, பழங்கள் உண்பதை இளந்தலைமுறை தவிர்க்கிறது

## சுகாதார அமைச்சர் கவலை

கொழும்பு, ஜூன் 12

தற்போதைய இளைய தலைமுறையினர் காய்கறிகள் மற்றும் பழங்களை உட்கொள்வதை வேகமாக தவிர்த்து வருகின்றனர். சுற்றுச்சூழலில் சத்தான மற்றும் சிறந்த பொருட்கள் காணப்பட்டாலும், பாடசாலைகளில் அவை குறித்து எவ்வளவு தூரம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டாலும் சிறுவர்கள் காய்கறிகள், பழங்களை விரும்புவதில்லை. பெற்றோர்களும் சமூகமும் அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டுக்கான தேசிய ஊட்டச்சத்து மாதம் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அமைச்சர் இதனை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

சுகாதார அமைச்சகம் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதத்தை தேசிய ஊட்டச்சத்து மாதமாக அறிவித்துள்ளது. ஊட்டச்சத்து விடயத்தில் வெகுஜன ஊடகங்கள் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன. ஊடக நிறுவனங்கள் ஒளிபரப்பும் செய்திகள், அறிவார்ந்த நிகழ்ச்சிகளில் மட்டுமல்லாமல், அனைத்து அரசு, தனியார் ஊடகங்களும் ஊட்டச்சத்து தொடர்பான சரியான செய்தியை பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டும். அதற்கான முறையான திட்டம் தயாரிக்கப்படவேண்டும்.

ஊட்டச்சத்து என்பது சுகாதாரத் துறையுடன் மட்டும் தொடர்புடைய ஒரு விடயம் அல்ல. மாறாக பல அமைச்சகங்களின் தலையீட்டின் மூலம் வெற்றிகரமாக அடையவேண்டிய ஒரு விடயம். இந்த ஆண்டு தேசிய ஊட்டச்சத்து மாதம் "காய்கறிகள் மற்றும் பழங்கள்' என்ற கருப்பொருளின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கருப்பொருளின் கீழ் நான்கு முக்கிய விடயங்களை அடையாளம் கண்டு சமூகத்துக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தினமும் குறைந்தது இரண்டு வகையான காய்கறிகள், ஒரு வகை கீரை மற்றும் இரண்டு வகையான பழங்களை உட்கொள்ளுதல் ஆரோக்கியத்துக்கு மிக முக்கிய விடயமாகும். முடிந்தவரையில், ஆரோக்கியமான காய்கறிகள் மற்றும் பழங்களை உண்ணுதல், குறைந்த விலையில் உள்ளூரில் கிடைக்கும் காய்கறிகள் மற்றும் பழங்களைத் தெரிவு செய்தல் என்பன முக்கிய விடயங்களாக கருதப்படுகின்றன - என்றார். (ஐ)

## தீவக...

அறிவுறுத்தியுள்ளார்.

புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு கடற்கரையோர மக்களுக்கே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தீவுகளின் கரையோரங்களில் பிளாஸ்ரிக், பொலித்தீன் தயாரிப்புக்கான மூலப்பொருள் பெருமளவில் கரையொதுங்கி வருவதாக கடல் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் கண்டறிந்துள்ளனர். இது அவர்களால் அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், கரையொதுங்கும் பிளாஸ்ரிக், பொலித்தீன் தயாரிப்புக்கான மூலப்பொருட்கள் சூழலுக்கும் மனிதனுக்கும் தீங்கை ஏற்படுத்தவல்லவை. எனவே, அவற்றை தொடுவதையும் எடுத்துச் செல்வதையும் தவிர்க்க வேண்டும். இவற்றை அகற்றுவதற்கான உரிய பொறிமுறை வரும் நாட்களில் முன்வைக்கப்படும் என்றும் பதில் அரச அதிபர் ம. பிரதீபன் அறிவித்துள்ளார். (ஐ)

## அபிவிருத்தி...

ஜனாதிபதியின் இந்த நியமனம் எனக்கு நம்பிக்கை அளித்துள்ளது. கடந்த காலத்தில் நானும் ஆளுநரும் மாவட்டத்தில் தனியாக தேர்தல் கால சுவரொட்டிகளை ஒட்டியுள்ளோம். இன்று மாவட்ட அபிவிருத்தி குழு தலைவராக இருப்பதை நினைத்து பெருமை அடைகிறேன். இங்கு சுற்றுலாத்துறை, விவசாயம், மீன்பிடி, என்பனவற்றை கட்டியெழுப்பவேண்டிய தேவை உள்ளது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மாகாண சபைகள் தேர்தல் குறித்து 2026 முற்பகுதியிலேயே தீர்மானம்!

## உள்ளூராட்சி பிரதி அமைச்ச ருவான்

கொழும்பு, ஜூன் 12

**மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து அடுத்த ஆண்டு முதல் காலாண்டில் முடிவு எடுக்கப்படும் என்று, அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் பிரபா ருவான் செனரத் இதனை அறிவித்துள்ளார்.

எல்லை நிர்ணய செயல்முறை போன்ற தீர்க்கப்படாத சட்ட மற்றும் தொழில்நுட்ப சிக்கல்களே, இதற்கான காரணம் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த சவால்கள் போதுமான அளவு தீர்க்கப்பட்டு உள்ளூராட்சி சட்ட கட்டமைப்பு உறுதிப்படுத்தப்படும் வரை தேர்தல்கள் நடத்தப்படாது என்று பிரதி அமைச்சர் கூறினார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான எல்லை நிர்ணய அறிக்கையை சமர்ப்பித்து பின்னர் அதை நிராகரித்திருந்தார்.

இதன் விளைவாக, அரசாங்கம் இப்போது பழைய தேர்தல் முறைக்குத் திரும்புவதையும் மாகாண சபைகளை எல்லை நிர்ணயம் செய்வதையும் பரிசீலித்து வருகிறது என்று அவர் குறிப்பிட்டார். (அ)

# இலங்கை-கனடா பாராளுமன்ற நட்புறவு சங்கம் தெரிவாகியது!

கொழும்பு, ஜூன் 12

பத்தாவது பாராளுமன்றத்தின் இலங்கை - கனடா பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவராக நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை - கனடா பாராளுமன்ற நட்புறவுச்சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்கான கூட்டம் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்றபோதே இத்தெரிவு இடம்பெற்றது.

இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வால்ஷ், இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார். அத்துடன், அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பதவியணித் தலைமையதிகாரியும், பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த ஹெட்டியாராச்சி இலங்கை - கனடா பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். (அ)

# துஷார உபுல்தெனியவின் சம்பளம் பாதியாக குறைப்பு!

கொழும்பு, ஜூன் 12

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனியவின் இடைநீக்கம் செய்யப்பட்ட காலப்பகுதியில், அவரது சம்பளத்தில் பாதியை வழங்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்காக நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

மேலும், நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் எச்.எம்.என்.சி. தனசிங்க, தனது வழக்கமான பதவியின் கடமைகளுக்கு மேலதிகமாக பதில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகமாகவும் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# இலங்கையில் மறைந்துள்ள இணையக் குற்றவாளிகள்!

## இந்திய புலனாய்வாளர் சந்தேகம்

சென்னை, ஜூன் 12

இந்தியாவில் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் இணையக்குற்றங்களின் முக்கிய செயற்பாட்டாளர்கள், இலங்கை மற்றும் கம்போடியாவில் மறைந்திருப்பதாக இந்திய புலனாய்வாளர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், தமிழக புலனாய்வுத்துறையின் கூடுதல் தகவல்களும் பெங்களூரின் புலனாய்வுத் துறையினருக்குக் கிடைத்துள்ளது.

இதனடிப்படையில், சுமார் 4 கோடி ரூபாய் மோசடி குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் பெங்களூரைச் சேர்ந்த வயதான தம்பதியினரின் வங்கிக் கணக்கிலிருந்து பல இலட்சம் ரூபாய்கள் பெறப்பட்ட சம்பவமும் உள்ளடங்கியுள்ளது.

எனினும் இந்த பணம் இணையக்குற்றங்களுடன் சம்பந்தப்பட்டவை அல்ல என்றும் இலங்கையின் கசினோவில் இருந்து திரும்பப் பெறப்பட்டது என்றும் கைது செய்யப்பட்டவர்கள் இந்திய விசாரணையாளர்களிடம் தெரிவித்துள்ளனர். (அ)

# அபிவிருத்தியை முன்னெடுக்கும்போது சூழலைக் கவனத்தில் எடுக்க வேண்டும்

## வடக்கு ஆளுநர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 12

அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும்போது சுற்றுச் சூழலைக் கவனத்திலெடுக்காமல் செயற்படமுடியாது. சுற்றுச்சூழல் பாதிப்பை குறைத்தே அதனைச் செயற்படுத்தவேண்டும். இதன்மூலமே எதிர்கால சந்ததிக்கு வளமான சுற்றாடலைக் கையளிக்கமுடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

பசுந்தேசம் அமைப்பும், இயற்கை நண்பர்கள் இயக்கமும் இணைந்து நடத்திய சர்வதேச சுற்றுச்சூழல் தின நிகழ்வு கைதடி சிறுவர் பூங்காவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,நாங்கள் சிறுவர்களாக இருந்த காலத்தில் இவ்வாறான சர்வதேச சுற்றுச்சூழல் தினம் எதுவும் இருக்கவில்லை. இன்று எல்லாவற்றுக்கும் தினம் கடைப்பிடிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம்.எதன் ஒன்றின் தேவை உணரப்படுகின்றதோ அதற்கு இன்று நாள்களை கடைப்பிடிக்கின்றோம். அந்த வகையில் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளமையால் அதற்கும் சர்வதேச நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது.

நாம் மீண்டும் சில விடயங்களில் பழைமைக்கு திரும்புவது சூழலை பாதுகாக்கும் என்று கருதுகின்றோம். அன்றைய நாள்களில் "சொப்பின்பை" என்று எதுவுமில்லை. ஆனால் இன்று எங்கும் எதிலும் "சொப்பிங் பை". அதை இலகுவாகவும் இலவசமாகவும் பெற முடிகின்றது.

அன்றைய நாள்களில் சிமெந்துதாள்களில் செய்த "மரத்தாள்பை" பயன்படுத்தப்பட்டது. இன்று வெளிநாடுகளில் "சொப்பிங் பை" பணத்துக்கே கொடுக்கின்றார்கள். அதைப்போன்று இங்கும் அதன் பாவனையை இறுக்கமாக்கவேண்டும்.

பெரியவர்கள் எதைச் செய்கின்றார்களோ அதைப் பார்த்தே சிறுவர்கள் பழகுகின்றார்கள். அவர்கள் சுற்றாடலை பாதிப்படையச் செய்கின்றார்கள் என்றால் பெரியவர்களாகிய எங்களின் செயற்பாடுகளே காரணம்.

எதிர்காலத்திலாவது மாற்றத்தை உருவாக்கலாம். எங்களால் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது என்றில்லை. எதையும் செய்யலாம். இந்த மாற்றத்தை உருவாக்குவதன் விதை விழிப்புணர்வில்தான் தொடங்குகின்றது-என்றார். (அ)

# இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தியோரின் சொத்து முடக்கம்!

## இந்திய அரசு அதிரடி நடவடிக்கை

சென்னை, ஜூன் 12

இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தியவர்களின் சுமார் 2 கோடி ரூபாய் இந்திய மதிப்பிலான சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன.

சென்னையில் போதைப் பொருள் வழக்கில் சிக்கியவார்களின் சொத்துக்களே இவ்வாறு இந்திய மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவால் முடக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவின் சென்னை மண்டல அதிகா ரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், சென்னை அருகே செங்குன்றத்தில் கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனார்.

அப்போது அங்கு மெத்தம் பெட்டமைன் போதைப் பொருள் கடத்தி வந்த ஒரு கும்பலைக் கைது செய்தனார். அவார்களிடமிருந்து 1,470 கிலோ மெத்தம்பெட்டமைன், ரூ. 1.29 கோடி ரொக்கம், 30 ஆயிரம் அமெரிக்க டொலார், இலங்கை நாட்டின் ரூபாய் நோட்டுகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

இது தொடார்பாக அப்பிரிவு வழக்குப் பதிந்து நடத்திய விசாரணையில், போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட அந்த நபார்கள், ஹவாலா பணப்பரிமாற்றத்திலும் ஈடுபட்டிருப்பதும், அந்தக் கும்பல் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு போதைப் பொருள் கடத்துவதும், சிந்தட்டிக் வகை போதைப் பொருளை மையமாகக் கொண்டு கடத்தலில் ஈடுபடுவதும் தெரியவந்தது.

இந்த வழக்கில் முக்கிய எதிரிகளான நிசாருதீன், அவார் மனைவி ரபீயா சஹானா ஆகியோருக்கு சொந்தமான ரூ. 2 கோடி மதிப்புள்ள 11 வீட்டு மனைகள், விவசாய நிலம் ஆகியவற்றை போதைப் பொருள் தடுப்புச் சட்டம், கடத்தல் மற்றும் அந்நிய செலாவணி மோசடி சட்டம் ஆகியவற்றின் கீழ் முடக்கப்பட்டதாக இந்திய மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.(அ)

# கிளிநொச்சி இளைஞர் காரைக்காலில் கைது!

சென்னை, ஜூன் 12

உரிய ஆவணங்கள் எதுவுமின்றி தமிழகம் காரைக்கால் ரயில் நிலையத்தில் சுற்றித் திரிந்த இலங்கையைச் சோர்ந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர் கிளிநொச்சிப் பகுதியை சேர்ந்த 35 வயதான அஜந்தன் என்பது தெரியவந்துள்ளது.

பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரித்த போது, அவரிடம் எந்த ஆவணமும் இல்லை என்பது தெரிய வந்தது.

கடந்த 2019 ஆம் ஆண்டு 6 மாத கால விஸாவில் இந்தியா வந்ததாகவும், விஸா காலம் முடிந்து இலங்கை திரும்பாமல் மேற்கு வங்கம், ஆந்திரா, டில்லி, கேரளா, தமிழ்நாடு என நாட்டின் பல பகுதிகளில் சுற்றித் திரிந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# சட்டவிரோதமாக கருக்கலைப்பு செய்த பெண் யாழில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் சட்டவிரோதமாக கருக்கலைப்பு செய்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண் அதீத இரத்தப் பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அதீத இரத்த பெருக்கே உயிரிழப்புக்கு காரணம் என மரண விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் , சுன்னாக பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org